ஸ்ரீ

# கோதையார்

பண்டிதை

ஸ்ரீமதி - S. கிருஷ்ணவேணி அம்மாள்

(*Head Tamil Pandit, Lady Willingdon High School, Madras*)

எழுதியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

1933

*Copyright*] [அணா 5.

ஸ்ரீ

# கோதையார்

பண்டிதை

ஸ்ரீமதி - S. கிருஷ்ணவேணி அம்மாள்.
(*Head Tamil Pandit, Lady Willingdon High School, Madras*)

எழுதியது

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

1933

*Copyright*] [அணா 5.

# முன்னுரை

ஈஸ்வரனிடத்து அன்பு பூண்டு ஒழுகிய பெரியோர் பலர் நம் நாட்டில் திகழ்ந்தனரென்பதை யாவரு மறிவர். அவர்களுள் சைவத்தொண்டர்களாகிய நாயன்மார்களைப்பற்றிச் சிறுவர் சிறுமிகளுக்குப் பாடமாக வைக்கும் முறையில் அநேக நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், வைஷ்ணவ அடியார்களாகிய ஆழ்வார்களைக் குறித்து யாவரும் நன்கு உணருவதற்கேதுவாகிய தமிழ் நடையில் பல நூல்கள் வெளிவந்தில. அதனால், ஆழ்வார்கள் எம்பெருமானிடத்துச் செலுத்திய உண்மை யன்பின் திறம் நம்மனோர் அறிவதற்கு இயலாமலிருக்கின்றது.

இக்குறையைப் போக்குதற்கேற்ற தொண்டினை மேற்கொள்ளவேண்டு மென்னும் ஆர்வம் அப்போதைக்கப்போது என் மனத்தைத் தூண்டிக்கொண்டே யிருந்தது. ஆதலின், இம்முறை, ஆழ்வார்கள் பன்னிருவருட் சிறந்தவரும், எம்பெருமானோடு ஐக்கியமாவதற் கேற்ற உயர்ந்த அன்பிற் றிகழ்ந்தவரும், பெண்களின் உயர்வை நிலைநாட்டினவருமாகிய **ஸ்ரீ கோதைப்பிராட்டி**யாரின் சிறப்பைச் சிறியதொரு நூலாக எழுதலாயினேன்.

கோதையார் அறிவின் மாண்பையும், தெய்வத்தன்மையையும், அன்பினியல்பையும் யாவரு மறிந்து இன்புறல் வேண்டுமென்பதே என் கருத்து. இக்கருத்தைக்கொண்டே இந்நூல் வெளியிட முன்வந்ததே யன்றி, எனது கல்வியறிவு முதலியவற்றை வெளிப்படுத்துதற்கன்று. ஆதலின், என் அறியாமையினால் இதில் நேர்ந்திருக்குங் குற்றங்களைப் பெருந்தன்மை வாய்ந்த பெரியோர்கள் எனக்குத் தெரிவிக்கின், பெரிதும் நன்றியறிதலுள்ளவளாக விருப்பேன்.

## முன்னுரை

தம் பெண்மக்களுக்குத் தக்க கல்வியைக் கொடுத்து அவர்களை அறிவுடையவர்களாய்த் திகழச்செய்யும் கருத்தற்ற பெற்றோர்களைப் போலன்றி, அடியாள் கல்வியில் சிறிது முன்னேறுவதற் கேற்ற வசதியைச் செய்தும், செய்துகொண்டும் வருகின்ற என் பெற்றோருக்கு என் மனப்பூர்வமான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இத்தகைய நூல் ஒன்றை எழுதுவதற்குத் தக்க தமிழ் ஞானத்தை யூட்டிய என் தமிழாசிரியர் - செந்தமிழ் இரத்திணுகரம் - ஸ்ரீமான் - வல்லை - சண்முகசுந்தர முதலியாரவர்கட்கும், இந்நூலில் வைஷ்ணவ தத்துவத்தின் உண்மைகளை ஆங்காங்குக் கூறுதற்காகிய ஞானத்தை யூட்டிய என் ஆசாரியர்-திருப்புறம்பயம் - பிரபந்த வித்வான். ஸ்ரீமான் - T. D. இராமசாமி இராமானுஜ ஸ்வாமிகள் அவர்களுக்கும் என்றும் நன்றியறிதலுடையேன்.

இத்தொண்டைத் தமிழுலகம் மகிழ்வுடன் ஏற்று, இன்னும் இத்தகைய தொண்டினை ஆற்றுமாறு எனக்கு ஊக்கமளிக்க வேண்டுமென மிகப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

லேடி வில்லிங்டன்
உயர்தரக் கலாசாலை,
9—1—'33.

S. கிருஷ்ணவேணி

# சாற்றுகவி

அரசாங்க மருத்துவ கலாசாலையில் உபந்யாசகராய் இருந்த

**செந்தமிழ் இரத்தினகாம். மருத்துவமணி**

**ஸ்ரீமான் வல்லை சண்முகசுந்தர முதலியார் அவர்கள்**

இயற்றிய

**அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்**

திருவளருங் கமலமுடன் குவளைமலர்
பிரியாது செறித லேய்ப்ப
மருவளரும் புஷ்பால மாபில்தயை
யீகையிவை வயங்கா நின்ற
தருவெனவோங் கப்பாயி குரிசிலுக்குத்
துணையாகித் தக்க கற்பின்
குருவனைய காமாட்சி யெனுஞ்சதியைக்
கூடிமிக வாழ்ந்த நாளில். க

செகமதனிற் சீமந்த புத்திரியாய்த்
திருவாடிப் பூரந் தன்னில்
அகமகிழப் பொறியெனவே யழகுபொறை
யினியமொழி யமைதி யாவுந்
தகவுடனே யமைந்துலக வாழ்க்கையது
மித்தையென தம்முட் கொண்டு
இகபரத்திற் கானபல கலைகளுமெம்
பாற்பயின்ற ஏத மில்லாள். உ

தம்போன்ற வருக்குதவி புரிந்திடுவா
ளுங்காங்குத் தமிழின் மாரி
யிம்பரினிற் பொழிந்திடவல் லறிஞரெலாம்
பண்டிதையென் றியம்பப் பெற்றே

## சாற்றுகவி

தம்பதவிக் கிழுக்கின்றி யரசாங்க
கல்லூரித் தலைமை யான
செம்பதுமி மருகியெனத் தமிழுபாத்
தியாயனியாய்ச் சேர்ந்து நின்றே. ௩

உலகமெலாம் புரந்தளிக்கு நாரணு
ரன்பதனி லொளிருஞ் செய்யா
ளிலகுவனத் தடியிலுறக் கண்டவிஷ்ணு
சித்தரிரு நிதியென் றேத்தப்
பலகலையு நல்லொழுக்கம் அருணிதியும்
தூய்நெறியும் படைத்துப் பின்னர்
விலகலிலாப் பேரின்ப மயமான
பாசுரங்கள் விரித்த கோதை. ௪

சரிதமதைச் சுவைபெறவே சுருக்கியதை
விளக்கமுறத் தனிமை யாகப்
பரிவுடனே கற்றோரு மற்றோரு
நனியுவந்து பயில்வ தற்குத்
தெரியவருங் கத்தியரூ பத்தினிலோர்
நூல்தந்து சீர்த்தி யுற்றாள்
பெரியவர்வாழ்த் தார்ந்தகிட்ண வேணியெனும்
பெருமாட்டி பெரிதும் வாழி. ௫

## சாற்றுகவி

### திருப்புறம்பயம் - பிரபந்த வித்வான்
### T. D. இராமஸ்வாமி இராமாநுஜ தாஸன்
இயற்றிய
### நேரிசை வெண்பா

சொன்மாரி பெய்கிருஷ்ண வேணியாம் சோனைமாரி
நன்மா முகில்ஆண்டாள் நற்சரிதம்—மென்மையதாம்
இன்னமுதைத் தீந்தமிழின் ஏர்வசன மாமழையால்
மன்னுலகிற் பெய்ததால் வந்து. க

பார்மடந்தை சொன்ன பனுவலைப் பாடியவர்
பாரளந்தான் தாமரைநேர் பாதத்தை—நேர்வதுபோல்
சேர்வரந்தச் செய்யவள் சேவடியன் னாள்கதையை
ஆர்வமுடன் ஓதுமடி யார். உ

பெண்ணின் பெருந்தகைமைப் பேருலகிற் கண்டுரைத்தல்
பெண்ணிற்கே யாகும் பிறர்க்காகா—தெண்ணுங்கால்
என்னுமதைக் காட்டும் எழிற்கிருஷ்ண வேணியம்மை
சொன்னவுயர் கோதைகதைச் சொல். ங

# பொருளடக்கம்


பக்கம்

1. பெரியாழ்வார் பெருமை .... .... 1
2. பூமி பிராட்டியார் உலகில் அவதரிக்க விழைதல் .... .... 4
3. மலர்வனச் சிறப்பு .... .... 7
4. பிராட்டியாரின் அவதாரம்.... .... 9
5. கோதையாரின் பிள்ளைப் பருவம் .... 11
6. சூடிக் கொடுத்தல் .... .... 13
7. பெரியாழ்வார் கனவு .... .... 22
8. கோதையார் சிறப்பு வெளியாதல் .... 25
9. ஆண்டாள் தம் விளையாட்டிலும் எம்பெருமானையே சிந்தித்தல் .... 27
10. ஆண்டாள் நோன்பு .... .... 29
11. கோதையாரின் மங்கைப் பருவம் .... 35
12. ஆண்டாள் திருவரங்கநாதனையே மணம்புரிய மனங்கொள்ளல் .... 36
13. கோதையாரைத் திருவரங்கம் கொண்டு செல்லுதல் .... .... 42
14. பிராட்டியார் எம்பெருமானோடு கலந்து மறைதல் .... ... 48



“சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே ! தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்? — நாடி நீ
வேங்கடவற் கென்னை விதியென்ற இம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.”

ஸ்ரீ

# கோதையார்

தனியன்

"அல்லிநாட் டாமரைமேல் ஆரணங்கி னின்றுணைவி
மல்லிநா டாண்ட மடமயில்—மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு."

## 1. பெரியாழ்வார் பெருமை

சீருஞ் சிறப்பும் வாய்ந்து, கல்விச் செல்வத்துக்கும் பொருட் செல்வத்துக்கும் நிலைக்களனாய் விளங்கிய பரதகண்டத்தின் தென் திசையில், சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு என்று மூன்று நாடுகள் உள்ளன. அம்மூன்றினுள், பாண்டியநாடே தமிழை வளம்படுத்திய நாடாகும். தலை, இடை, கடை என்னும் தமிழ்ச் சங்கங்களைத் தாங்கியதும், தமிழ்த்தாயைப் போற்றி வளர்த்த புலவர்கள் பல்லோரை ஈன்றதும் இந்நாடே. இறையனாரகப்பொருள் போன்ற மனோதத்துவ நூல்களையும், திருக்குறள் போன்ற நீதிப் பனுவல்களையும், தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் அளித்த நாடும் இதுவே. இந்நாடு, தன்னையடைந்தோர் உடல் வன்மையையும், மனநலத்தையும் பெறத்தக்க தூய்மையுடைய வையை, தாமிரவருணி முதலிய நதி

களினுல் நீர்வளம் பொருந்தியும், என்றும் குன்ருத நானில வளப்பத்தினுல் செல்வச் சிறப்பு நிறைந்தும் உள்ளது. இதில், பதினெட்டு விஷ்ணு ஸ்தலங்களும், வேறு பல தெய்வக்கோட்டங்களும் மிக்கிருத்தலின், இது தெய்வத் தன்மையும் வாய்க்கப் பெற்றது. பல மாறுதல்கள் நிகழ்ந்துவரும் இக்காலத்திலும் இங்குக் கல்வி மணமும், தெய்வமணமும் கமழ்ந்துகொண் டிருக்கின்றன. இன்னோரன்ன சிறப்புக்கள் பல இந்நாட்டில் இன்றும் விளங்கக் காண்கின்ருேம்.

அமிழ்தினும் இனிய தமிழ் வளமும், தேனினும் இனிய தெய்வச் சிறப்பும் வாய்க்கப்பெற்ற இந்நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் திருப்பதி ஒன்று உண்டு. அது, வில்லி என்னும் வேடுவனெருவனுல் புதிதாகக் காணப்பட்டமையின், வில்லிபுத்தூர் என்னுந் திருநாமம் பெறலாயிற்று. அவ்வூரில், பெருந்தன்மை வாய்ந்த பிராமண குலத்தில் உதித்து, எம்பெருமானுக்குப் பூமாலை பாமாலைகளைக் கெழுமிய அன்புடன் சமர்ப்பித்து வந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியார் ஒருவர் இருந்தனர். அவர் பெரிய திருவடியின் அமிசமென்று நூல்கள் கூறுகின்றன. தம் உடலும் உயிரும் எம்பெருமானே என்னும் உறுதியான எண்ணம் அவருள்ளத்தில் நிலைபெற்றிருந்தது. அவர், அடியார்க் கெளியவனும், அன்பினுற் கட்டுண்டவனும், தத்துவ நூலாகிய பகவத் கீதையை வெளியிட்டவனுமாகிய கண்ணபிரான்மாட்டு அளப்பிலாப் பக்தி செலுத்திவந்தார்.

எம்பெருமானுக்குப் பிள்ளைத் தமிழையும், பிரணவார்த்தத்தின் கருத்தான **திருப்பல்லாண்டையும்** பாடிய பெரியார் இவரே.

உலகில் எம்பெருமானுக்குச் செய்யுங் கைங்கரியங்களுள் மிகச் சிறந்தது மலர்மாலை தொடுத்துச் சாத்துதல் என்பதை நன்குணர்ந்த விஷ்ணுசித்தர், கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ முதலிய நால்வகைப் பூக்களும் நிறைந்த ஓர் அழகிய மலர்வனம் அமைத்து, அல்லும் பகலும் அதன்கண் திருத்தொண்டு புரிந்துவந்தனர். நாடோறும் வைகறையில் துயிலெழுந்து, வண்டு முகராததும் தேன்மணம் மாறாததுமான பலவகை மலர்களைக் கொய்து, அவைகளைத் தாமம், இண்டை, கண்ணி, தொடையல் முதலியவைகளாகப் பாகுபடுத்தி, வில்லிபுத்தூரில் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் வடபத்ரசாயிக்குச் சமர்ப்பிப்பதே அவர்தம் தொழில். இன்னும்,

> "நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மைகடை."

> "நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
> நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
> எழுத்தாகும் யாக்கை"

என்னும் முதுமொழிகளை மனமிருத்திய பெரியாழ்வார், உலக விஷயங்களிற் பற்றற்று, தம் ஆத்ம சொரூப லக்ஷணத்தை நன்குணர்ந்து '**உண்ணுஞ் சோறும், தின்னும் வெற்றிலையும் எம்பெருமானே**' என மிக்பக்தியுடைய

ராய்த் தம் வாணுளை வீணுளாக்காது, பயனுடைய தாய்க் கழித்து வந்தனர்.

ஆழ்வார் எம்பெருமானிடம் செலுத்திவந்த பக்தி, குற்றங் கலவாத தூய்மையுடையதாதலால், அத்திருப் பதியில் வாழ்ந்திருந்த உண்மை அன்பர்களும், அவர் மாட்டு நன்மதிப்புக் கொண்டிருந்தனர். அவர் தவச் சிறப்பே, பூமிபிராட்டியின் அமிசமாகிய ஆண்டாளை அவருக்குத் திருக்குமாரியாக நல்கியது. உண்மை அன் பர்களுக்கு இத்தகைய பேறு கிடைப்பது வியக்கத்தக்க தொன்றன்று. இறைவனன்பர்கள் பெருத பேறும் உண்டோ?

---

## 2. பூமி பிராட்டியார்

## உலகில் அவதரிக்க விழைதல்

இனி, நம் ஆண்டாள் பிராட்டியின் வரலாற்றை நோக்குவோம்: ஒருகால் ஸ்ரீமந்நாராயணன் க்ஷீராப்தி யில் யோகநித்திரை நீங்கி, ஸ்ரீதேவி நீளாதேவிகளு டன் இரத்தினகசிதமான சிம்மாசனத்தில் வீற்றிருக் குங்கால், பூமிபிராட்டியார், எம்பெருமான் திருவடித் தாமரைகளில் வணங்கி நின்று, "ஸ்வாமீ! உலகின்கண் உள்ள ஆன்மாக்களுள் எவ்வியல்பு வாய்ந்தவர்களிடம் தேவரீர் அன்பு கொள்வீர்?" என்று மிகப் பணிவுடன் வினவினர். அதற்கு எம்பெருமான், "நிலையற்ற உலகப் பொருள்களில் பற்றற்று, நம்மாட்டு உண்மை ஆர்வங்

கொண்டு, பக்திப் பெருக்கினுல் பாமாலை பூமாலைகளை நமக்குச் சூட்டுகின்ற பாகவதர்கள் எவர்களோ அவர்கள்மாட்டே நாம் மிக்க அன்பு கொள்வோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

அவ்வமயம் பூமிபிராட்டியார், ஆண்மக்களை நல்வழிப்படுத்தற்குத் தோன்றிய ஆழ்வார் ஆசாரியர்களின் பெருந்தன்மையையும், அத்தகை உதவி பெண்மக்களுக்குக் கிடையாமையையும் ஆழ்ந்து சிந்தித்து, "நாமேனும் சென்று இத்திருத்தொண்டை மேற்கொள்ளவேண்டும்; இன்றேல், உலகில் ஒருசாரார் ஞானமின்றிப் பெரிதும் பயனற்றவ ராவர்" என்னும் அருள்நினைவைக் கொண்டனர். ஆதலின், அவர் எம்பெருமானை நோக்கி, "ஐயனே, நிலையற்றதை நிலையென உணர்தல் புல்லறிவாளர் தொழிலாதலின், அவர்களைப்போல் நிலையற்றவற்றில் பற்றுவையாது, பாமாலை பூமாலைகளைக் கொண்டு தேவரீரை ஏத்தும் கைங்கரியமே சிறந்ததென்பதை உலகினர்க்குச் செய்கையில் காட்டவேண்டுமென்னும் கரைகடந்த ஆர்வம் அடியாள் மனத்தில் எழுகின்றது; அங்ஙனம் இயற்ற அடியாளுக்கு விடையளிப்பின், உலகிற் சென்று, அச் சிறந்த கைங்கரியங்களைப் புரிந்து, இவண் வருவேன்" என்று வேண்டி இறைஞ்சினர்.

அங்ஙனமே ஸ்ரீவில்லிபுத்தூரில் புண்ணிய சொரூபியாய்த் திகழும் பெரியாழ்வாருக்குத் திருக்குமாரியாய்த் தோன்றி, ஆத்ம சொரூபத்திற்கு அமைந்த பல தொண்டுகளைப் புரிந்து, தமக்குள்ள ஆர்வத்தை

முற்றுப்பெறச் செய்யப் பிராட்டியாருக்கு எம்பெருமான் விடையளித்தனர்.

மேற்கொள்ளும் செயல் மிகச் சிறிதேயாயினும், அதன் உண்மைத்தன்மையை யுணர்ந்த பிறகே அதில் ஈடுபடுவது அறிவுடையோர் கொள்கையாதலின், எம்பெருமான் தம்மைச் செல்லும்படி பணித்த அத் திவ்ய தேசத்தின் சிறப்புத்தன்மைகளை அறிய அன்னையார் மனம் விழைந்தது.

ஆதலின் எம்பெருமான், பூமிபிராட்டியாராகிய அவ்வம்மையாருக்குத் துன்பமிழைத்த ஹிரண்யாட்சனை, தாம் வராக வடிவங்கொண்டு அழித்து அவனுக்குத் தருமங்களை உபதேசித்தது முதல், வடபத்ரசாயிக்கு அத்யந்த கைங்கரியஞ் செய்துவரும் பெரியாழ்வார் அவதரித்திருப்பது ஈறுகத் தெரிவித்து, அத் திவ்ய க்ஷேத்திரத்தின் சிறப்பையும் விளக்கமாக எடுத்துக் கூறினர்.

அவற்றை மிக ஊன்றிய கருத்துடன் செவியேற்ற பூமிபிராட்டியார், எம்பெருமான் கட்டளையின்படியே ஸ்ரீ வில்லிபுத்தூரிலுள்ள பெரியாழ்வார் மலர்வனத்தில் மகவாய்த் தோன்றத் திருவுளங்கொண்டு, எம்பெருமானிடம் விடைபெற்றனர்.

## 3. மலர்வனச் சிறப்பு

இவ்வாறாக, மெய்ஞ்ஞானியும், ஈஸ்வரனுக்கு அடிமை பூணுதலையே (சேஷத்வத்தையே) ஆத்மசொரூபமாகக் கொண்டுள்ளவருமான பெரியாழ்வார், பற்றற்ற கண்ணே பிறப்பறும் ஆதலால், எல்லா விஷயப் பற்றுக்களிலிருந்தும் நீங்கி, நிரதிசயானந்தத்தை யளிக்கும் ஸ்ரீயஃபதியின் செவ்விய திருவடிகளையே பற்றுக்கோடாகப்பற்றி வாழ்ந்திருந்தனர். அவர்,

“ அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றிய ”

பெரியாரைப் போன்று, மனமாகின்ற வனத்திலுள்ள ஆர்வமாகின்ற தேனோடு கூடிய அன்பாகின்ற மணங்கமழும் இன்புருகு சிந்தையாகிய மலர்களைக்கொண்டு இடைவிடாது பரம்பொருளை அர்ச்சிப்பதையே தம் முக்கிய செய்கையாக மேற்கொண்டிருந்தனர். ஆயினும், அவ்வித அந்தரங்க அன்புடன் மாத்திரம் ஆழ்வார் அமைதி கொள்ளாமல், தம் க்ஷேத்திரத்திலுள்ள வடபத்ரசாயிக்குப் பூமாலை கைங்கரியத்தையுஞ் செய்து கொண்டு வந்தனர் என முன்னரே கூறியுள்ளோம்.

இப்பெரியார், ஈஸ்வரனுக்கென வைத்துப் பாதுகாத்து வந்த மலர்வனம், கண்டோர் மனத்தைக் கவர்ந்து, தன் வசப்படுத்தும் இயற்கை வனப்புக்கள் நிரம்பப் பெற்றதா யிருந்தது. அத்தகைய சிறப்பு

வாய்ந்த மலர் வனத்தின் பெருமையைச் சிறிது நோக்குவாம்:

சேவ்விய காந்தள்மலர்கள், இரவலரைப்போன்று கை யேந்தி நிற்ப, கொன்றை மரங்கள் அரச னெனப் பொன்மலர்களை அவைகளிற் சொரிந்தன. சத்துவம், சுத்தம், சாராசாரத்தைப் பிரித்தறிதல் ஆகிய பல சிறப்புக் குணங்களைப் பெற்ற நல்லாசிரியரை யொத்த அன்னங்கள், அருக்கனொளியால் அழகுடன் எழுந்து, இதழ்களை விண்டு விளங்கும் செந்தாமரை மலர்களில் தங்கியிருந்த காட்சி, ஞானிகளின் மனத்தை வசீகரித்தது. மல்லிகை, முல்லை, இருள்வாசி, சம்பங்கி முதலிய கொடிப் பூக்கள் மிகுதியாக மலர்ந்து தம் கலப்பான மணத்தினுல் மக்களுக்கு இன்பத்தை யூட் டின. அவற்றின் தேனை யுண்ணவரும் வண்டுகள், பெண்கள் ஆடும் கழற்காயென, மலர்களிற் படிவதும் எழுவதும் இனிய பண்ணோசையை மிழற்றுவதும், அப் பண்ணோசைக்கேற்பமயில்கள் ஆடுவதும், அவ் வாடலிற்குத் தகக் குயில்கள் இனிமையாய்ப் பாடுவதும் இயற்கையழகைச் சிறப்பிக்கும் புலவருக்குப் பெருவிருந் தென மிளிர்ந்தன. காண்போர் கண்களைக் கவரச்செய் யும் கவினுடைப் பறவைகள் பல, வைகறைப் பொழு தில் தம் கூட்டை விட்டு மரக்கிளைகளில் அமர்ந்து, தாம் அன்று முழுவதும் செய்யவேண்டிய வேலைகளைப் பற்றிப் பேசித் தீர்மானிப்பது போன்று, கீச்சுக் கீச்சு என்று சத்தமிட்டன. பனித்துளிகள் புற்களின்

நுனியில் முத்துக்களைப் போன்று தங்கிப் பலருக்கும் களிப்பூட்டிய காட்சி மிகச் சிறப்புடையதாகும். மலர்களின் நறுமணத்தில் கலந்தெழுந் தென்றற் காற்று மெல்லென வீசும். இன்னணமாகிய இயற்கையழகுகள் பல அங்கு இயைந்திருந்தன.

---

## 4. பிராட்டியாரின் அவதாரம்

அம் மலர்வனத்தில், பச்சைக் கம்பளம் விரித்தாற்போன்ற புற்றரையில், திருமாலுக்கு விருப்பமானதும், உடற்பிணிகள் பலவற்றையும் அஞ்ஞான இருளையுங் கடியத்தக்கதும், எம்பெருமான் திருமேனி நிறத்தை நினைப்பூட்டக் கூடியதுமான திருத்துழாய்ச் செடிகளின் நறுமணம் எங்கும் கமழ்ந்துகொண்டிருந்தது. அச்செடிகளுள் ஒன்றன்கீழ், குற்றமற்ற மாற்றில்லாத தங்கத்தை உருக்கிவிட்டதைப் போன்று பூமிபிராட்டியார் ஒரு பச்சைப் பசுங்குழவியாய் வீற்றிருந்தனர்*. வனமடர்ந்த பசும்புற்றரை, மக்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் சிறந்த விருந்தளித்து உடலையும் உயிரையும் ஓம்புமன்றோ?

---

* ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த திருநாள், நளஞு ஆடிமீ சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையுங் கூடின பூர நக்ஷத்திரம் என்று குருபரம்பரைகள் கூறுகின்றன. ஆனால், ஆராய்ச்சியாளர், தம் ஆராய்ச்சியினால் திருப்பாவை செய்தருளிய காலம் கி. பி. 731 என்றும், அன்னையார் அவதரித்த காலம் கி. பி. 716 என்றும் கூறுகின்றனர்.

இங்ஙன மிருக்க, பெரியாழ்வார் ஒருநாள், ஞான அங்குரங்களும் சிறந்த சாத்விக குணமும் தலையெடுக்குங் காலமாகிய வைகறையில் துயில் நீங்கி, வழக்கம்போல் மலர்வனம் புக்கனர். ஆண்டு, அவரது அருட்பார்வையை, அவ்வனத்தின் ஓர் ஒப்பற்ற இடம் இழுத்துச் சென்றது. பொதுவாக, மனம் ஒன்றை நினைத்த பின்னரே புலன்கள் அதிற் செல்வது மரபாயிருப்பினும், தெய்விகத் தன்மை வாய்ந்த சில விடங்களில் புலன்கள் சென்ற பிறகே மனஞ் செல்வதை அறிகின்றோம். அங்ஙனமே, ஆழ்வார் நோக்கம் சென்ற இடத்திற்கே மனமும் செல்லத் தொடங்கிற்று ; ஏககாலத்தில் பல இளஞாயிறு எழுந்ததைப்போன்று அவ்வனத்தில் வீசிய ஒரு தெய்விக ஒளி, இரும்பைக் காந்த மிழுப்பதுபோல, அவரை இழுத்துச் சென்றது. தம்மை யறியாமலே அவர் அவணடைந்தனர்; அங்குள்ள அருட்டிறத்தைக் கண்டனர் ; "இது யாதோ?" எனத் திகைத்தனர் ; விம்மினர்; பெருமூச்செறிந்தனர்; ஒன்றுந்தோன்றாது சிறிது நேரம் நின்றனர்; 'இது நினைவோ, அன்றிக் கனவோ?' என ஐயங்கொண்டனர் ; பின்னும் உற்று நோக்கினர்; இறுதியாக, 'இஃது ஓர் அருட்டிறம் வாய்ந்த குழவியே!' எனத் தெளிந்தனர். மேற்கூறிய பல இயற்கையழகுகளும் நிரம்பித் ததும்பும் சிறந்த இலக்கணம் வாய்ந்த ஒரு தெய்விக இளங்குழவியைக் கண்ட ஆழ்வாருக்கு இத்தகை உணர்ச்சி உண்டாதல் வியக்கத்தக்க தொன்றுமோ.

அவ்வாறு திகைப்புற்ற விஷ்ணுசித்தர், சிறிது தெளிந்தாராய், தெய்வத்தன்மை வாய்ந்த அக்குழவியை எடுத்து மார்புற அணைத்து, உச்சிமோந்து, "அடியேன் உய்யும் பொருட்டே எம்பெருமான், தெய்வ ஒளி வாய்ந்த இக்குழவியை அடியேனுக் களித்தனன் போலும்!" எனத் திருமாலைத் துதித்து, அக்குழவிக்கு, 'சுரும்பார் குழற் கோதை' எனப் பிள்ளைத் திருநாமஞ் சூட்டினர்; தெய்வ அருளாற் கிடைத்த செல்வியை மிக்க அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர்.

## 5. கோதையாரின் பிள்ளைப் பருவம்

தாம் போர்த்திருந்த நீலப்பட்டாடையைச் சிறிது சிறிதாக நீக்கித் தம் ஏவலை எதிர்நோக்கா நிற்கும் பணிப் பெண்கள் களிக்க, நளிர்முகங் காட்டித் துயில்எழும் ஓர் அழகிய அரசியாரைப் போன்று, புறவிருளை நீக்கி உயிர்களுக்குப் புதிய ஊக்கத்தை யளிக்கும் ஆதித்தன், நீலமேகத்தை யொதுக்கித் தன் இளங்கதிர்களைப் பரப்பி எழுவதற்கு முன்பே ஆழ்வார் துயிலெழுந்து, வண்டு முகராத பலவித மலர்களையுங் கொய்து வருவது அவருக்கு வழக்கமன்றோ? அவர் அம்மலர்களைக் கொண்டு செண்டுமாலை, இண்டை, கண்ணி, தொடையல், பிணையல் முதலிய பலவித மாலைகளைத் தொடுத்து, எம்பெருமானுக்கு அதிக பக்தி விநயத்துடன் சாத்தி வருவாராயினர்.

இப் பெரியார் சீராட்டி வளர்த்துவந்த கோதையார், தமது மாசற்ற முழுச் சந்திரன் போன்ற திருமுகத்தைப் பார்த்து, மாசுற்ற சந்திரன், 'இது குற்றமற்ற மதியோ !' என அஞ்சி, காவணத்தூடு ஒளித்து ஓடவும், அத்திருமுகம் அசையுந் தோறும், நீலோற்பலம் போன்ற நீண்ட விழிகள் ஒளிரவும், முகமாகிய சந்திரனைக் கண்ட குமுதம் மலர்ந்ததெனக் குமுதவாய் நகை கொள்ளவும் வளர்ந்து, அன்றலர்ந்த செந்தாமரை போன்ற திருமுகத்தை நிமிர்த்து எம்பெருமானைத் தம்மிடம் வரவேற்பதெனத் தோன்றும் செங்கீரைப் பருவத்தை யடைந்தார்.

மக்கள்மாட்டு உண்டான கருணைத் திறத்தினுல் தம் சிறந்த பதவியைவிட்டுக் கீழிறங்கி, உலகச் சிறுமியாய்த் தோன்றி உயிர்கள் எம்பெருமானை யடைதற்குத் தக்க வழியைக் காட்டிய நம் அன்னையார், அம்புலிப் பருவத்தைஅணைந்தனர்; அப்பருவத்தில்,அழகிய விசும்பில் கம்பீரமாக உலவிவருஞ் சந்திரனைத் தம் அழகிய மலர்க்கைகளைக் காட்டித் தம்மிடம் வருமாறு அழைத்துக் களிப்பது, அவனை எம்பெருமானிடம் தூதனுப்புவதற்குப் பரிவுடன் அழைப்பதுபோல் தோன்றிற்று.

பின்னர், கண்ணன் திருவார்த்தைகளைப் பயின்றுடுவதற்கு ஏதுவாகிய அம்மானைப் பருவத்தைப் பிராட்டியார் அடைந்தனர். இன்னணம் தம் பிள்ளைப் பருவங்களிலும் இறைவன் தொடர்பைக் கொண்டே அன்னையார் அழகின் கொழுந்து எழுவதென வளர்வா ராயினர்.

தம் ஆத்ம இலக்ஷணத்தை நன்குணர்ந்து அதற்கேற்ற செய்கைகளையே மேற்கொண்டொழுகிய ஆழ்வாரிடம் வளர்ந்து வந்த நம் கோதையார் தம் பிள்ளைப் பருவங்களைக் கடந்து, நிலத்தியல்பிற்கேற்ப நீர் திரிவது போன்று, இனத்தியல்பிற்குத் தக்க ஞானத்துடன் திகழ்வாராயினர். ஆயினும், இவ்வம்மையாரின் ஞானம், தீபத்தின் கீழ்த் தீவர்த்தி என ஆழ்வாரின் ஞானத்தைக் காட்டிலும் விஞ்சி நின்றது.

---

## 6. சூடிக்கொடுத்தல்

இன்னணம் கோதைப் பிராட்டியார் கொண்ட ஈஸ்வர பக்தி, வளர்பிறையென நாளும் வளரா நின்றது. அன்பிற்கு அடைக்கும் தாழ் இன்றாதலால், ஆழ்வார் நீராடச் செல்லும் அமயம் பார்த்து ஆண்டாள் அழகுக்கழகு செய்வதெனப் பல விலையுயர்ந்த அணிகளால் தம்மை ஒப்பனை செய்துகொண்டு, மிக்க குதூகலத்துடன், தொடுத்து வைத்த மாலைகளையும் அணிந்து, "யான் வடபெருங்கோயி லுடையானுக்கு நேரொத்திருக்கின்றேனோ? இலனோ?" என அங்குள்ள ஆடியில் பார்த்துத் தமக்குத் தாமே மகிழ்வர்; ஆயினும், எங்குத் தந்தை வந்துவிடுவரோ என்னும் அச்சத்தால் அவைகளை விரைவில் களைந்து முன்போலவே வைத்துவிட்டு, வேறு காரியங்களில் ஊன்றியிருப்பர்.

இச்செய்கை பன்னாட்கள் நடந்தேறிவரினும், ஆழ்வார் இதை ஒரு சிறிதும் அறிந்திலர். உண்மையில் நாடோறும் ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலைகளே வடபத்ரசாயியை அழகுபடுத்தி வந்தன எனப் புகல்வது மிகையாகாது. ஆனால், சூடிக் கொடுப்பதற்கே தோன்றிய நம் அன்னையார், என்று மாலைகளை அணியத் தொடங்கினரோ அன்று முதல் அவை முன்னில்லாத தெய்வமணம் வீசத் தலைப்பட்டன. மலருக் குள்ள இயற்கைமணத்துடன் நம் கோதையாரின் அன்பு மணமும் அதனுடன் கலந்தமையின், என்று மில்லாத நறுமணச் சிறப்பு அதிலுண்டாயிற்று. அவ்விஷயம் அர்ச்சகர்களுக்கு மிக்க வியப்பைத் தந்து வந்தது. ஆனால் அவர்களும் அன்னையார் சூடிக்கொடுக்கும் உண்மையை உணர்ந்திலர். "ஆழ்வார் ஈஸ்வரனிடம் செலுத்தும் பக்தியின் முதிர்ச்சியே இச்சிறந்த மணத்திற்குக் காரணம்" என்பது அவர்கள் எண்ணம். அவர்கள் அன்னையாரின் அருந்திறனை அறியார்களாதலால், அவர்கள் கருத்து, பெரியாழ்வார் அளவிலேயே நின்றது. ஆதலின், அவர்கள் ஆழ்வாரிடத்தில் முன்னினும் பதின்மடங்கு அன்பு செலுத்துவாராயினர். இதுவுங் கொள்ளத்தக்கதே யாகும். ஏனெனில், பூமிபிராட்டியார் ஆழ்வாருக்குத் திருக்குமாரியாக அவதரித்தது அவர் தவப்பயனே என்பதை யாரே மறுக்க வல்லார்? "தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்" என்னும் ஆன்றோர் திருவாக்கு இங்கு அறியத்தக்கது.

செல்வம் என்பதைப் பொருட் செல்வத்திற்கெனக் கொள்ளினும், இங்கு மக்கட் செல்வத்திற்கெனக் கொள்ளுதல் இழுக்காகாதன்றே ?

இன்னணம் நாடோறும் நடந்தேறி வருங்கால், ஒருநாள் ஆழ்வார் வழக்கம்போல் தூய மலர்களைக் கொண்டு மாலைதொடுத்துப் பூக்குடலையிலிட்டு, மேலே தூக்கிவிட்டுத் தீர்த்தமாடச் சென்றார்; சென்றவர், யாது காரணத்தினாலோ அதிவிரைவில் திரும்பினர். ஆண்டாள் அற்புத அன்பை ஆழ்வாருக்குக் காட்டுதற் பொருட்டே எம்பெருமான் அவரை விரைவில் திரு மாளிகைக்குத் திரும்பச் செய்தனர் போலும்! அன்றும் கோதையார் வழக்கம்போல எம்பெருமானுக்கென வைத்திருந்த மாலைகளை யணிந்து அங்குள்ள ஆடியில் பார்த்துக்கொண்டிருந்தனர்.

தம் அருமைச் சிறுமியின் செய்கையைக் கண்ட ஆழ்வாரின் மனம் திடுக்குற்று நடுங்கியது. அவர் ஒன்றுந் தோன்றாராய்ச் சிறிதுநேரம் வாளா விருந்தனர். இவ்வாறு தம் புதல்வி செய்வர் என்பதை அப்பெரியார் கனவிலுங் கருதவில்லையாதலால், சிறிதும் எதிர்பாராத இச்சம்பவம், அவரைக் கரைகடந்த துன்பக்கடலில் ஆழ்த்தியது. “இப்போது நாம் காணும் இக்காட்சி உண்மை தானா ? அன்றி நம் நோக்கு மயங்கி ஒன்றை வேறொன்றாகக் காண்கின்றதா ?” எனச் சில விநாடிகள் வரையும் ஆழ்வார் ஐயங்கொண்டனர். நம் கோதையாரோ, “அவன் அழகிற்கு நாம் ஒத்திருப்போமா ;

எம்பெருமான் நம்மை அங்கீகரிப்பானு?'' என்னும் உயர்ந்த எண்ணத்திலேயே மனத்தைப் பதித்திருந்தன ராதலால், ஆழ்வார் வரவையும், அவர் நிலைமையையும் சிறிதும் உணர்ந்திலர்.

இங்ஙனம் தந்தையார் வரவை ஒரு சிறிதும் நோக் காது தம் அனுபவத்திலேயே யூன்றி யிருக்கும் மக ளாரின்முன் ஆழ்வார் சென்று தழுதழுத்த குரலுடன், "குழந்தாய்! இம்மதியை உனக்குக் கற்பித்தவர் யாவர்? எம்பெருமானுக்கென வைத்துள்ள மலர்மாலைகளை முகரு தலே குற்றமாயிருக்க, அவைகளை அணிதல் எத்தகைக் குற்றம் என்பதை நீ யறியாதது மிக விந்தையே! இத் தீய செய்கையைச் செய்ய உன் மனம் எங்ஙனம் துணிந் தது? அந்தோ! நீ இத்துணை அறிவற்ற செயலில் புகுவாயென யான் சிறிதும் கருதினேனில்லை! முன் னரே இதைப்பற்றி உனக்குப் புத்தி புகட்டாதது என் அறியாமையே யாகும். நுட்பமதியுடைய உனக்கு இத் துணைச் சிறியவிஷயங்களை அறிவுறுத்துதல்மிகையென யான் எண்ணிய எண்ணம் அவமே போலும்! இதை உல கத்தார் அறியின் என் சொல்லுவர்? எம்பெருமான் தொண்டுகளைப் பயபக்தியுடன் செய்யவேண்டு மென் பது, நீ அறியாத தொன்றன்று. இவைகளில் ஒரு சிறி தும் மாறுபடாமல் ஒழுகிவரும் ஆத்ம பந்துக்களாகிய பாகவதைகளுடன் இளமையிலிருந்தே பழகி வருகின்ற உனக்கு,இக்குணம் உண்டானதற்குக் காரணம்யாதென யானறிகிலேன். ' தோட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் '

என்னும் பழமொழியும் உன்னிடம் பொய்த்து விட்டது போலும்! பலபடக் கூறியென்? இதுவும் எம்பெருமான் விளையாட்டே" எனக் கூறி அலமந்தனர்.

ஆழ்வார் சொற்கள் யாவும் அன்னையார் செவியில் புகுந்தன. ஆயினும், அவர் மறுமாற்றம் ஒன்றும் பகராராய்த் தலைகுனிந்த வண்ணமே நிலத்தை நோக்கிக் கொண்டு கவலையுடன் நின்றனர்; கயலையொத்த கண்களில் நீர் ததும்பியது; தாமரை போன்ற திருமுகம் கூம்பியது. தாம் செய்தது தந்தையின் எண்ணத்திற்கு மாறுபட்டதென அவர் நன்குணர்ந்தனர். தாம் எம்பெருமான்மாட்டுச் செலுத்தும் அன்பின் உறுதியைத் தந்தைக்கு எடுத்துக்காட்டுதற்கு அது காலமன்றுதலின், அவ்வமயம் மௌனத்தைவிடச் சிறந்த வழி வேறொன்றும் அவருக்குப் புலப்படவில்லை. ஆகவே, அன்னையார் தாம்செய்தது பிழையென உணர்ந்தவர்போன்றும், பெரிதும் அஞ்சியவர் போன்றும் ஒன்றும் பேசாது வாளாவிருந்தனர். இங்ஙனம், அறியாமையில் மூழ்கிய உலகச் சிறுமியைப் போன்று பரிதபிக்கின்ற அம்மையாரின் காட்சி, ஆழ்வார் மனத்தை உருகச்செய்தது. அவருக்கு முன்னிருந்த கரைகடந்த கோபம் கருணையாக மாறிற்று. அவர், சிறிது நேரம் அம்மையார் செய்த செய்கையைப் பற்றி ஆழ்ந்து யோசித்தனர். அவ்வமயம், அவருக்கு அது, முன்போன்று பெருங் குற்றமாகத் தோன்றவில்லை. ஏனெனில், "இளமையில், அழகிய பொருளைக் காணுங்கால் அதைத் தாம் பெறவேண்டுமென்னும்

எண்ணம் குழந்தைகளுக்கு உண்டாதல் இயல்பு. அன்றியும், நாம் இச்செய்கை குற்றமெனக் கூறியவுடன் தன் பிழையை நன்கு உணர்ந்தனள்; இனி இவள் இத்துணைத் தப்பிதத்தைச் செய்யத் துணியாள். இன்னும் அதிகங் கண்டிப்பினும் குழந்தையின் மனம் உடைந்து துக்கத்தில் ஆழ்ந்துவிடும். அது, மக்களை நல்வழிப்படுத்த நினைக்கும் பெற்றோர்க்குத் தகுதியன்று; ஆதலின், நாம் இவளை இத்துடன் மன்னித்து மனவூக்கத்தைத் தருஞ்சொற்களினால் தேற்றுதலே சாலச் சிறப்புடைத்து" என்னும் எண்ணங்கள் அவருக்குத் தோன்றின. அதனால், ஆழ்வார் கோதையாரைத் தம் மடிமீதிருத்தி, அவர் கண்களைத் துடைத்து, "குழந்தாய்! இனி இத்தகைய தகாத காரியங்களைச் செய்வதற்கு நீ முற்படுதல் கூடாது; இஃது அறிவுடையோர் செய்கையன்று; பெரியோர் வைத்துச் செல்லும் பொருளை அவர்தம் உத்தரவின்றித் தீண்டுதலே குற்றம். அதனினும் எம்பெருமானுக்கு வைத்துள்ள பொருளைத் தனக்கென உபயோகிப்பது மிகப்பெரிய குற்றமாகும்? இதனை ஆழ்ந்து நோக்கின், இப் பிழையை நீயே உணர்வாய். இவ்விதத் தீய விருப்பங்களிற் செல்லும் மனத்தை அடக்கி ஆளுவதே அறிவுடையோர்க் கழகு. நுண்ணிய அறிவு வாய்ந்த உனக்கு அதிகம் உரைப்பது மிகையாகும்" என அன்பு கெழுமிய பல சொற்களை இன்புறச் சொல்லி அறிவுறுத்திவிட்டு, மறுபடியும் மலர் பறித்து, மாலை தொடுத்து எம்பெருமானுக்குச் சாத்துதற் பொருட்டு ஆழ்வார் மலர்வனம் புக்கனர்.

ஆழ்வார் நந்தவனத்தில் மலர் கொய்யச் சென்ற போது, அவர்கை மலரைப் பறித்ததே யன்றி, மனம் கோதையாரையும், ஈஸ்வரன் மாட்டுண்டான அபசாரத் தையுமே குறிக்கொண்டிருந்தது. ஆண்டாள் அஞ்சித் தலை குனிந்து நின்ற உருவப்படம் அவர் முன்னிலை யில் பன்முறை தோன்றிற்று. அன்னையாரின் கண்கள் உகுத்த நீர் அவர் நெஞ்சை நெகிழச் செய்தது. "எப் போது வீடு சென்று அவள் நகை முகத்தைக் காண் போம்" என்ற எண்ணம் அவரை உந்தியது. இதற்கு இடையில், "எம்பெருமான் கைங்கரியத்தில் குற்றம் விளைந்ததே; என் செய்வோம்!" என மனந்தியங்கினர். ஆனல், என்றுமில்லாத ஒருவித ஆநந்தம் அன்று தமக் குண்டாவதாகவும், ஏதோ ஒரு சக்தி தம்மை ஊக்குவ தாகவும் அவர் உணர்ந்தார். ஆதலால் அவர் அதிவிரை வில் மலரைக்கொண்டு வீடு திரும்பினர். அங்ஙனம் திரும்பினவர், தம் மகளுக்கு நகைமுகங் காட்டி, மலர் தொடுப்பதற்கு அவரையும் தமக்கு உதவியாய் வைத் துக்கொண்டு, அழகிய மாலைகள் சமைத்து, வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்துவிக்கக் கொண்டுபோயி னர்.

இங்கு, தந்தையும் புதல்வியும் நடந்து கொண்ட முறையிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள. ஆயினும், அவற்றுள் இரண் டொன்றை மாத்திரம் இயம்புவாம்: குழந்தைகள் குற்றஞ் செய்யுங்கால் அதற்கேற்ப அவர்களைச் சிறிது

கண்டித்தலும், அன்போடு அவர்களுக்கு நல்லறிவு கொளுத்தலும், அத்தகைய குற்றங்களை மீண்டும் செய்ய மனமெழாவாறு அவர்களைத் திருத்தலும், அவர்கள் இயல்பறிந்து தமக்குண்டான கோபத்தை மாற்றிக்கொண்டு, நகை முகங்காட்டி, அவர்களை அன்புடன் ஆதரித்தலும் அறிவுடைய பெற்றோர் கடமையாகும். பெற்றோர் சில சமயங்களில் தம் வயதிற்கும் அநுபவத்திற்கும் இயல்பிற்கும் ஏற்றவாறு சிறுவர்கள் மனத்திற்கு மாறுபட்ட விஷயங்களைக் கூறுங்கால், அப்போதே அவர்களை எதிர்த்து மறுமாற்றங் கூறிப் பெற்றோர் மனத்திற்குத் துன்பத்தை விளைவியாது, பொறுமையுட னிருந்து, தம் இயல்பை அவர்கள் உணர்ந்து கொள்ளுமாறு நடப்பதே அறிவுடைய மக்களுக்கு அழகிதாகும். அங்ஙனமே இவ்விருவரும் தத்தம் கடமைகளை முறையே செய்தனர் என நாம் நன்கு உணர்கின்றோம்.

மேற் கூறியவாறு தம் திருக்குமாரியை உற்சாகப் படுத்திவிட்டு மாலைகளைச் சந்நிதிக்குக்கொண்டுசென்ற ஆழ்வாரை, அர்ச்சகர்கள் மிக்க விநயத்துடன் வரவேற்று, மாலைகளை வாங்கி அன்புடன் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தினர். அர்ச்சகர்கள் எப்போதும் போன்றே இக்கைங்கரியத்தைச் சுவாமிக்குச் செய்திருந்தும் எம்பெருமானிடத்தும், மாலைகளிடத்தும் அன்று ஒரு பெரும் மாறுதல் தோன்றிற்று. அஃதாவது, மாலைகளைச் சமர்ப்பித்தவுடனே வடபத்ர

சாயி தம் முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொண்டனர்; மாலைகளும் முன்போல மணங் கமழ்ந் தில. இக்காட்சி அர்ச்சகர்களுக்கும், ஆழ்வாருக்கும் வியப்பையும் கவலையையும் ஒருங்கே தந்தன. அங்குச் சில நிமிடங்கள் வரை ஒரு சிறு சத்தமும் உண்டாக வில்லை. ஒருவரை யொருவர் பன்முறை நோக்கிக் கொண்டனரே யன்றி ஒன்றும் பேசிலர். அவர்கள் குறிப்பு, 'என் சொல்வது? என் செய்வது?' என அறி யாது தியங்குவதுபோற் காணப்பட்டது. பின் அவர்கள் 'இதன் உண்மைக் காரணத்தை யறிவது எப்படி?' என் னும் கருத்துடனே வெளிவந்து "இதற்கு எம்பெரு மான் தான் அருள்புரிய வேண்டும்; அவன் எண்ணத்தை யறிய அற்பர்களாகிய நம்மாற் கூடுமோ! நம்மாட்டு அவனுக்கு அருளிருக்குமேல் விரைவில் இதனை வெளி யிடுவான்" எனத் தீர்மானித்துக்கொண்டு, மிக்க கவலை யுடன் தத்தம் இருப்பிடஞ் சேர்ந்தனர். ஆயினும் அவ் விஷயம் அவர்கள் மனத்தைவிட்டு அகன்றிலது. இஃது எங்கும் என்றும் நடைபெறாததும், எவரும் பார்த்தும் கேட்டும் இராததுமான அருஞ்செயலன்றோ? ஆதலின், அன்று முழுதும் அவர்கள் இதையே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், பெரியாழ்வார்மாத்திரம் இதற்குக் கார ணம் தாமும், தம் சிறுமியுமே எனத் தீர்மானித்து, அதைப் பிறருக்குத் தெரிவிக்க அஞ்சிச் சொல்லொணுத் துயரத்துட னிருந்தார். நிற்க.

# 7. பெரியாழ்வார் கனவு

ஆண்டாளின் அவதார விசேஷத்தை இனியே னும் உலகத்தாருக்குத் தெரிவிக்கவேண்டு மென் னும் கருத்துடன், தம் அர்ச்சாவதாரத்தில் மாறுத லுண்டாக்கிக் கொண்ட வடபத்ரசாயி, அன்றிரவு பெரி யாழ்வார் கனவில் எழுந்தருளினர். ஆழ்வார் பல நாட்களாக ஈச்வரனிடத்து உண்மைப் பக்தியைச் செலுத்திவரினும், அத்தகைய அனுபவத்தை அவர் என்றுங் கண்டிலர். அத் திவ்ய சொரூபத்தின் ஒளி அவர் கண்ணை மறைத்தது. தம்மை யறியாத ஆநந்தம் அவர் மனத்திற் பொங்கித் ததும்பிற்று. அது கனவு என்பதை அவர் மறந்து, உண்மையாகவே தாம் ஓர் அற்புத தேஜஸைக் காண்பதாகக் கருதினர். ஆனல் அவருக்குப் பேச நாவெழுந்திலது. ஒன்றுந் தெரியாது அவர் மயங்கி நின்றனர். அந்நிலையில் எம்பெருமான் ஆழ்வாரை நோக்கி, "ஆழ்வீர்! இன்று சிறிதும் மண மற்றதும், எமக்கு விருப்பமற்றதுமான மாலைகளைச் சாத்தியதற்குக் காரணமென்னை?" என வினவினர். தாம் நேரந்தாழ்த்து மலர்களையெடுத்துத் தொடுத்ததே குற்றமென்பது ஆழ்வார் மனத்தில்நன்கு ஊன்றியிருந்த மையின், கனவிலும் அந்நினைவே அவருக்குத் தோன் றிற்று. ஆகவே, ஆழ்வார் எம்பெருமானைப் பணிந்து "பத்துடை யடிவர்க் கெளியவனுய், அன்பர்கள் குற்றங் கடியும் என் ஐயனே! உண்மைப் பக்தர்கள் மனமாசு

தீர அருள்புரியுந் துய்யனே ! வழக்கம்போல் அடியேன் வைகறையில் துயிலெழுந்து, தேன்மணம் நீங்காத மலர்களைக் கொய்து மாலைசமைத்து வைத்திருந்தேன். அவைகளைத் தம் அடிமைச் சிறுமி வழங்கா வகை கண்டனள். ஆதலின், பின்னர்க் கிடைத்த மணமற்ற வேறு மலர்களைக்கொண்டு மாலைசெய்து தேவரீருக்குச் சமர்ப்பித்தேன். அடியேன்மாட்டு நிகழ்ந்த இப்பிழையைப் பொறுத்தருளல்வேண்டும்'' என்று எம்பெருமான் திருவடிகளைப் பற்றிக்கொண்டு மிக்க வணக்கத்துடன் விண்ணப்பஞ் செய்தனர். பூமிபிராட்டி அவதாரத்தின் அருந்தன்மையை வெளிப்படுத்துதற்குத் தக்க அமயம் எம்பெருமானுக்கு அப்போது வாய்த்தது. ஆதலால் அவர், அன்பே உருவெனத் திகழும் ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர், கோதையாரின் பெருமையை நீவிர் அறியாமையினலேயே இங்ஙனம் பகர்ந்தீர்! அவளை யாரென நினைத்தீர்? அவள், நமக்குச் சூடிக்கொடுக்க வந்த சுடர்க்கொடி என அறியீரோ; இனி ஐயம் நீங்கிக் கவலையொழிக; அவள் சூடிக் கொடுக்கும் மாலைகளினலேயே என்னை அலங்கரித்து மகிழக் கடவீர். அதுவே யாம் உகப்பது'' எனப் பலவற்றை அவருக்கு அருளிச்செய்து மறைந்தனர். அதன்றியும், சந்நிதிக் கைங்கர்யபரர்களுக்கும் அங்ஙனமே சொப்பனஞ் சாதித்தருளினர்.

**உடனே** ஆழ்வார் விழித்துக்கொண்டு நோக்க, எம்பெருமானைக் கண்டிலர். அப்போதுதான் அவருக்குத் தாம் அதுகாறும் கண்ட காட்சியும், கேட்ட அருள்

மொழிகளும் கனவென விளங்கின. பின்னரும் ஒன்றன்பின் ஒன்றாகத் தம் மனத்திற்குப் புலப்படுவதனால் கனவிற் கண்ட யாவும் அவருக்கு அப்போதும் கண் முன் காண்பன போலவே (பிரத்தியக்ஷ ஸாக்ஷாத்காரமாகவே) இருந்தன. ஆதலால் அவர் வழக்கமாகச் செய்யும் நித்ய கருமங்களையும் மறந்தார். படுக்கையை விட்டெழுதற்கும் அவருக்கு மனம் எழவில்லை. ஆகவே, "அந்தோ! இன்னும் சிறிதுநேரம் விழியாமலிருந்திருப்பின் எம்பெருமான் என்னை விட்டகன்றிராரே! அடையப் பெறாத அருநிதியை அடையப் பெற்றும் அறியாமையினால் இழந்தேனே! ஒன்றிற்கும் பயனற்ற அற்பனாகிய அடியேன் இப்பேற்றைப் பெற்றது இவ் அருமைச் சிறுமியின் அருளினா லன்றோ? அறிவறிந்த மக்கட் பேற்றைக்காட்டினும் பெற்றோர் இவ்வுலகில் அடையும் சிறந்தபேறு வேறுண்டோ? ஈஸ்வரன் அருட்டிறம் இருந்தவா றென்னே! இவள் சீர்மைத்திறன் செப்புந் தகைமையதோ! பொறுமைக்குப் பூஷணமும், அடக்கத்திற்கு அருநிதியும் இவளே யாவள் என்பதில் ஐயம் யாது? மலையினுயர்ச்சி மலை யுணராதன்றோ; நிறை குடம் தளும்புமா?" என ஆழ்வார் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

இவர் நிலைமை இங்ஙனம் இருக்க, கோயில் அர்ச்சகர்களும் இதேவிதமான சொப்பனத்தைக் கண்டு, ஒன்றுந் தோன்றாராய்த் தியங்கி, அதைப் பெரியாழ்வாரிடம் கூறியே தெளியவேண்டுமென நினைத்து, ஆழ்வா

ரிடம் வந்தார்கள். வந்தவர்கள், தங்களுக்கு இறைவன் கனவில் திருவாய் மலர்ந்தருளிய அருண்மொழியை ஆழ்வாருக்குத் தெரிவித்தார்கள். அம்முறையில் இரு திறத்தவர்தம் கனவின் கருத்துக்களும் ஒன்றுபட்டிருந்தன. அஃது இரு திறத்தாரையும் சொல்லொணு வியப்பில் ஆழ்த்தியது. அதன் உண்மையை அன்று காண வேண்டுமெனத் தீர்மானித்து அவர்கள் தத்தங் காரியங்களில் ஈடுபட்டனர்.

---

## 8. கோதையார் சிறப்பு வெளியாதல்

அன்று ஆழ்வார், புதியமலர்களைக் கொணர்ந்து தொடுத்து எம்பெருமான் கட்டளையின்படியே கோதையாருக்குச் சூட்டி அழகு பார்த்தனர். அஃது அன்னையாருக்கு அளப்பிலா உவகையை அளித்தது. மாலைகளும் மிக்க மணம் வீசின. பின்னர், ஆழ்வார் அம் மாலைகளைக் கொண்டுபோய்ச் சந்நிதி அர்ச்சகர்களிடம் சேர்ப்பித்தனர். 'இம்மாலைகளை வடபத்ரசாயிக்குச் சாத்துங்கால் இன்று என்ன மாறுதல் உண்டாகப்போகின்றதோ!' என மிக்க ஆவலுடன் நோக்கிக்கொண்டிருந்த அர்ச்சகர்கள், பெரியாழ்வார் கொடுத்த மாலைகளை மிக்க விநயத்துடன் எம்பெருமானுக்குச் சாத்தினுர்கள். அவ்வமயம் எதிர்பாராத ஒப்பற்ற ஓர் ஒளி அச்சந்நிதியில் தோன்றிற்று. அத்தெய்விக ஒளி எங்கும் பரவி, அங்கு

இருந்தோர் கண்களையும் மனத்தையும் மயக்கிற்று. அங்ஙனம் தியங்கின அவர்கள், சிறிது தெளிந்து எம் பெருமானை நோக்குங்கால், அவர், தம் திருமுகத்தை நேர்மையாகத் திருப்பிக்கொண்டு புன்முறுவலுடனிருக்கக் கண்டார்கள். எக்காலத்தும் எவரும் கண்டும் கேட்டுமிராத அக் காட்சி, அவர்களுக்குப் பெரும் வியப்பைத் தந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அன்றியும், அதனால் ஆண்டாளின் தெய்வத் தன்மையையும், எம்பெருமான் அவள்மாட்டு வைத்துள்ள அன்பின் பெருக்கையும், அதனை அவன் உலகத்தாருக்குத் தெரிவித்த திறனையும் அவர்கள் ஒருவாறு உணர்ந்தனர். அவ்வமயம் கோதையாரை மானிடக் குழந்தையென நினைத்த நினைப்பு அவர்களிடமிருந்து நீங்கிப் போயிற்று; உடனே அர்ச்சகர்கள் ஆழ்வார் திருவடிகளில் விழுந்து வணங்கி அவரைத் துதித்தனர்.

அதைக் கண்ட ஆழ்வார் தேடப் போன இருநிதி தானே கிடைக்கப் பெற்றாரைப் போன்றும், வழி தவறிப் பாலைவனத்தில் அலைந்து இளைப்புற்று அயருங்கால், குளிர்ந்த தண்ணீரையும் தழைத்த சோலையையும், ஊர் செல்லத் தக்க நெறியையும் எதிர்கண்டாரைப் போன்றும் சொல்லொணா உவகைக்கடலில் ஆழ்ந்தனர். ஆழ்வாருக்கு ஆநந்தக் கண்ணீர் சொரிந்தது. தம் அருட் கண்ணால் ஆண்டாளைச் சிறிது நேரம் நோக்கி, அவரை இறுகத் தழுவிக்கொண்டு "இவ்வம்மையாரைப் பின்னைப் பிராட்டி யென்பேனோ; திருமாமகள் என்பே

ஞே; என்னை ஆளவந்த தெய்வ மென்பேனே! எங்ஙனமேனும் என்னை ஆண்டாள் இவளே" எனப் புகழ்ந்து, அவருக்கு ஆண்டாள் என்னுந் திருநாமஞ் சூட்டி, அன்று முதல் அவர்மாட்டு முன்னையினும் மிக்க அன்பு பாராட்டி வந்தனர்.

---

## 9. ஆண்டாள் தம் விளையாட்டிலும் எம்பெருமானையே சிந்தித்தல்

ஈதிங்ஙன மிருக்க, அன்னையார் உலகச் சிறுமிகளைப் போன்று மணலால் சிறு வீடு கட்டித் தம்மை யொத்த இளம்பெண்களுடன் விளையாடுவர். இது பெண்களுக்குரிய சிறந்தவொரு விளையாட்டாகும். பெண்கள், அவ்வீடுகளில் சிறுசிறு செப்புக்களை வைத்துக்கொண்டு மணற்சோறு சமைத்தல், விருந்தினரை வரவேற்று உபசரித்தல், இரப்பவர்களுக்கு ஏதேனும் ஈதல், ஒருவர் வீட்டிற்கு ஒருவர் போதல், பதுமைகளுக்கு மணஞ் செய்தல் முதலிய பல விளையாட்டுக்களைப் புரிவது வழக்கம். அப்பழக்கம் அவர்களது பிற்கால வாழ்க்கைக்குப் பெரிதும் பயனளிப்பதாகும். ஆனால், தம் மக்கள் இவ் விளையாட்டுக்களை மேற்கொள்ளும்போது, அவர்கள் தீய குணமுள்ள பிள்ளைகளோடு சேராதவாறு கவனித்துக்கொள்வது பெற்றோர் கடமையாகும். இவ்விளையாட்டுப் பருவம், குழந்தைப் பருவங்களுள் ஒன்று

கும். அவ்வமயங்களிலும் அன்னையார் மனம் எம்பெருமான்மாட்டே ஊன்றியிருந்தது. எங்ஙனமெனில், அழகிய மணவாளன் வந்து தாம் கட்டிய சிறு வீட்டைச் சிதைத்துச் செல்வதாகக் கருதுவர்.

> "குண்டு நீருறை கோள ரீமத
> யானை கோள்விடுத் தாய்! உனைக்
> கண்டு மாலுறு வோங்க ளைக்கடைக்
> கண்க ளாலிட்டு வாதியேல்
> வண்டல் நுண்மணல் தெள்ளி யாம்வளைக்
> கைக ளால்சிர மப்பட்டோம்
> தெண்டி ரைக்கடற் பள்ளி யாயெங்கள்
> சிற்றில் வந்து சிதையேலே"

என வரும் அம்மையார் பாசுரங்கள் இவற்றை நன்கு விளக்கும்.

அன்னையார், உலக நன்மையின் பொருட்டே தோன்றி யிருப்பினும், அவர் உணர்வும் உள்ளமும் எம்பெருமானையே நாடி நின்றன. அஃதாவது, "ஈஸ்வரனை என்று அடைவோம்? அவன் அருளைப் பெறுவதெங்ஙனம்? அவைகளை யடையத்தக்க உபாயம் யாது?" என்னும் முறைகளையே அவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தனர்.

ஆயினும்,

> "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
> அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
> இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
> அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு ளானே."

"மாண்டுபிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரும்
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே"

என மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களும், அடியவர்களும் புகழ்ந்துள்ளதான அர்ச்சாவதாரப் பெருமை ஆண்டாளின் மனத்தைக் கவர்ந்திலது.

---

## 10. ஆண்டாள் நோன்பு

ஆழ்வார்கள் அநுபவத்திற்கும், ஆண்டாள் அநுபவத்திற்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. மற்றைய ஆழ்வார்களுக்கும், ஆண்டாளுக்கும் பக்தியில் அணுவுக்கும் மலைக்கும் உள்ள ஏற்றத் தாழ்வு உண்டெனப் பூர்வாசார்யர்கள் (பேரியவாச்சான் பிள்ளை முதலியோர்) தெரிவித்துள்ளார்கள். ஆதலின், இவரது அன்பு, அவ்வமயம் தம்மோடு வார்த்தையாடிக் கலந்து உறவாடுதற்குத் தகுதியற்ற அர்ச்சாவதாரத்திற் செல்லவில்லை. சில சமயங்களில் எம்பெருமானை இச்சரீரத்தோடு சென்று தழுவிக்கொள்ளவேண்டுமெனவும், அவனோடு வார்த்தையாட வேண்டுமெனவும் நினைத்து, அது முடியாமையின் பெரிதும் வருந்துவர். சில சமயங்களில், எம்பெருமானை இச்சரீரத்தோடு அநுபவித்தவர்கள் முன்பு எவரேனும் உளரோ என எண்ணுவர். ஒருவரும் தமக்குப் புலப்படாமையின் சிறிது மயங்குவர். இங்ஙனம் அன்னையார் தியங்குங்கால், திருவாய்ப்பாடியில் அவதரித்து

மானிட உடலோடு கண்ணபிரானுடன் கலந்து அவன் கலியாண குணங்கள் அனைத்தையும் அநுபவித்த கோபிகளின் நினைவு அவருக்குத் தோன்றிற்று. ஆனால் அக் கோபிகளின் காலம், தமது காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாதலால், அங்குச் சென்று அவர்களுடன் கலந்து களித்தற்கும் தவம் பெற்றிலோமே எனப் பெரிதும் வருந்தினர். அவர், அங்குப் பல திருவிளையாடலைப் புரிந்த இடத்தையும் கோபிகைகளுடன் கூடி நீர்விளையாடிய யமுனையையும், கறவைகளையும் கன்றுகளையும் காக்கக் கையில் ஏந்திய கோவர்த்தன மலையையும் சேவித்தேனும் ஆறுதல் பெறலாமென நினைத்தனர். ஆனால் அத் திவ்யதேசம் மிக்க தூரத்தில் இருப்பதினால், அதுவும் தம்மால் இயலாதெனக் கருதிச் சொல்லொணாத் துக்கத்தில் மூழ்கினர். "அந்தோ! சீதாபிராட்டியின் திருமணத்திற்கு வில்லொன்றிருந்தது. நப்பின்னைப்பிராட்டியாரின் வதுவைக்கு ஏழு எருதுகள் இருந்தன. யானோ எம்பெருமானை யடைவதற்கு யாதொன்றையும் பெற்றிலேனே! என் செய்வேன்!" என நினைத்து, ஆற்றொணாத் துயரத்தி லாழ்ந்து தளர்ந்தனர்.

ஆயினும், தம் தந்தையாரிடம் வரும் பெரியோர்கள் எம்பெருமான் விஷயமாகச் செய்யும் சத் காலக்ஷேபங்களை அவ்வப்பொழுது கேட்டு வருவது அன்னையார் மனத்திற்குச் சிறிது ஆறுதலளித்தது. இந் நல் விஷயத்தில் ஆழ்வாரும் தம் அருமைத் திருமகளுக்

குப் போதிய சுதந்திரங் கொடுத்திருந்தனர். இஃது, ஆண்டாளுக்குப் பெரிதும் உவப்புடையதா யிருந்தது. "எம்பெருமானை அணுகி இன்புற விரும்புகின்றவர்கள், அவன் திருநாமங்களைப் புகழ்ந்து பாடித் திருப்தி யடைவார்கள்" எனச் சில சமயங்களில் அச்சான்றோர் கள் கூறுவதுண்டு. அதை மனத்திலேற்ற கோதை யார், எப்போதும் அவன் திருநாமங்களையே புகழ்ந்து பாடிக்கொண்டிருப்பதுதான் தமக்குத் தக்க வழியாகும் எனக் கருதினர். இவ்வாறு தாம் நினைத்தது தகுதி யுடையதா எனப் பன்முறையும் தம் மனமென்னுந் துலை யில் வைத்து அறிவென்னும் துலைநாவினுல் வரையறுத் துப் பார்த்தனர். பின் எம்பெருமானை யடைவதற்குத் தக்க வழி அதுவே யென அவருக்குத் தோன்றிற்று. ஆகவே இடைவிடாது அவன் நாமங்களைப் புகழ்ந்து பாடு தற்குச் சாதனமாயுள்ளதும், அன்பிற் றிகழ்ந்த கோபி கள் ஆயர்பாடியில் அநுஷ்டித்ததுமான மார்கழி நீராட் டம் என்னும் நோன்பில் அவர் மனஞ் சென்றது.

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு"—**திருக்குறள்**

"நுண்ணிய கருமமும் எண்ணித் துணி"—**அவ்வையார்**

என்பவைகளுக் கேற்ப, அதையும் பன்முறை நன்கு ஆராய்ந்து, அதுவே சிறந்த வழி எனத் தீர்மானித்து அந் நோன்பு நோற்க முற்பட்டனர். ஆனல், அதற்கு வேண்டிய அங்கங்கள் யாவற்றையும் ஏற்படுத்திக்

கொள்ள வேண்டுமென்றே? அம்முறையில், ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தாம் அவர்களுள் ஒருத்தியாகவும், வடபெருங்கோயிலை நந்தகோபன் திருமாளிகையாகவும், உள்ளுறங்குகின்றவனைக் கிருஷ்ணனாகவும் உருவகஞ் செய்துகொண்டனர். பின், அவர் திருவாய்ப்பாடியில் மனஞ் செலுத்திக் கண்ணபிரான் காலத்தில் கோபிகள் இருந்த நிலைமையை ஊன்றி நோக்கித் தாமும் எல்லா விதத்திலும் அவர்களைப் போன்றே எல்லா ஒழுக்கங்களையும் மேற்கொள்ளலானார். முதலில், சிறந்த நோன்பு ஒன்று நோற்க ஏற்பாடுசெய்துகொள்வதையும், இரண்டாவது, தம்மையொத்த பெண்களைத் துயிலிலிருந்து எழுப்புவதையும், மூன்றாவது, யசோதை, நந்தகோபன், கண்ணபிரான் முதலியவர்களைத் துயிலுணர்த்துதலையும், கடைசியாகத் தமக்கு வேண்டிய புருஷார்த்தங்களை எம்பெருமானிடம் வேண்டி அவற்றைப் பெறுவதையும் அதற்குப் பொருளாக வகுத்துக் கொண்டனர். நிற்க.

ஒரு வருடம், உத்தராயணம், தக்ஷிணாயனம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றது. தை முதல் ஆனிவரை உத்தராயணம் எனவும், ஆடி முதல் மார்கழிவரை தக்ஷிணாயனம் எனவும் சொல்லப்படும். இவ்விரண்டு அயனங்களும் தேவர்களுக்கு ஒரு நாளாகும். அவர்களுக்கு உத்தராயணம் பகலாகவும், தக்ஷிணாயனம் இரவாகவும் இருக்கின்றனவென நூல்கள்

கூறும். பெரியோர், ஆதித்தன் செல்லுங் கதியைக் கொண்டே இவ்வயனங்களுக்குப் பெயரிட்டுள்ளனர். அஃதாவது, பகலவன் கீழ்த்திசையின் வடசார் ஒதுங்கிச் செல்லுங்காலம் உத்தராயணமெனவும், தென்சார் ஒதுங்கிச் செல்லுங்காலம் தக்ஷிணாயனமெனவும் கூறுவர். இதில்எது சிறந்தது, எப்போது மக்களுக்கு நன்மைகள் உண்டாகும் என்னும் விஷயத்தை அறிந்துகொள்ளுவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகும். தக்ஷிணாயனத்தின் கடைப்பகுதியாகிய மார்கழிமாதம், தேவர்களுக்கு அதிகாலை ஆகும். ஆகலின், ஆண்டாள் அம்மாதத்தின் முப்பது நாட்களிலும், முப்பது பாசுரங்களை, முற்கூறிய கருத்துடன் பாடி, அவற்றிற்கு அழகிய நோன்பு என்று பொருள்படுவதான திருப்பாவை எனப் பெயரிட்டனர்.

காலையிலெழுந்து, திருவாராதனஞ் செய்கின்ற ஒவ்வொரு பாகவதரும் இத் திருப்பாவை முப்பது பாசுரங்களையும் பாராயணம் செய்தே தீரவேண்டும். இன்றேல், அது வைஷ்ணவ முறையின்படி செய்கின்ற ஆராதனமாகாது. இம்முறையில், இது பாகவதர் ஒவ்வொருவருடைய நாவிலும், நாடோறும் பயிலப்படுகின்றது. இது கேட்போர் மனத்தைப் பிணிக்கும் இனிமையும், பொருட் செறிவும் வாய்ந்தது. இதை ஆராயுங்கால் ஆழ்ந்த பல பொருள்கள் காணப்படினும், இது சிறிது படித்தவர்களும் பொருளறியுமாறு எளிய நடையையும், இனிய சொற்களையும் பெற்று விளங்குகின்

றது. தெய்வ அருளும் பக்தி மணமும் வீசுகின்ற இதன் சிறப்பு ஈண்டுக் கூறுந்தரமன்றாதலின், இதனை இவ்வளவில் நிறுத்தி மேலே செல்வாம்.

அன்னையார், தாம் எம்பெருமானை அடைவதற்காக, மன்மதனை வேண்டுதல், மேகத்தைத் தூதுவிடுத்தல் முதலிய கருத்துக்கள் அடங்கிய நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்களைத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவர், நாச்சியார் திருமொழி எனப் பலராலும் புகழப்படுகின்றதும், இலக்கிய இலக்கண அமைப்புக்கள் பொருந்தியதும், அகப்பொருட்சுவை ததும்பப் பெற்றதுமான அப் பாசுரங்களைப் பாடி எம்பெருமான்மாட்டு மிக்க பக்தியுடன் ஒழுகிவந்தனர். அப்பாசுரங்கள் ஒவ்வொன்றும் பல விசேடப் பொருள்களைப் பெற்று விளங்குகின்றன.

ஆண்டாள் ஈசுவரன் மாட்டு அளப்பிலா ஆர்வம் கொண்டதுடன் தம் தந்தையாரை நோக்கிவரும் பெரியோர்களும், புலவர்களும் கூறும் பல ஆராய்ச்சி விஷயங்களையும் மனத்தில் இருத்தி அவைகளின்படி ஒழுகி வந்தனர்.

## 11. கோதையாரின் மங்கைப் பருவம்

எம்பெருமான் பக்தியிலும், பாகவதர்கள் அன்பிலும் மூழ்கி, அறிவிலும், கல்வியிலும் சிறந்து விளங்கிய தம் மகளாரைக் காணுந்தோறும் ஆழ்வாருக்கு அளப்பிலா உவகை பூத்தது. இன்னணம் அறிவிற் சிறந்து அழகின் கொழுந் தெழுவதென வளர்ந்து வந்த ஆண்டாள் மங்கைப்பருவ மடைந்தனர். தம் அருமைத் திருமகளாரின் அறிவின் வளர்ச்சியும், அழகின் மாட்சியும் ஆழ்வார் மனத்திற்குப் பெரிதும் களிப்பையுண்டாக்கியதாயினும், மற்றொரு வருத்தம் அவர் மனத்தைத் துன்புறுத்திற்று. அஃதாவது, “இவள் அழகிற்கும், அடக்கத்திற்கும், அறிவிற்கும், பத்திக்கும் ஏற்ற நாயகனைத் தேடுவது யாங்ஙனம்? இவ்விஷயத்தில் நாம் பெரிதும் மனஞ்செலுத்த வேண்டுமே; இது பெற்றோர் கடமையாயிற்றே; இக்கடமையைச் சரிவரச் செய்திலேமாயின், நாம் இவளை இத்துணைச் சிறப்புடன் வளர்த்ததன் பயன் என்னாகும்? என் செய்வோம்; எங்குச் செல்வோம்! எவ்வாறு நம் திருமகளின் வாழ்க்கையைப் பயனுடையதாக்குவோம்!” எனப் பல எண்ணங்கள் அவர் மனத்தை வருத்திக்கொண்டிருந்தன. இதை ஆழ்வார் பன்னாளும், பன்முறையும் சிந்தித்தும் தமக்கு ஒரு முடிவும் ஏற்படாமையின், இவ்விஷயத்தில் தம் மகள் எண்ணத்தை அறியத் தீர்மானித்தனர்.

# 12. ஆண்டாள் திருவரங்கநாதனையே மணம்புரிய மனங்கொள்ளல்

ஒருநாள் பெரியாழ்வார் ஆண்டாளை அன்புடன் அழைத்துத் தம் அருகில் அமர்த்தி, "என் அருமைப் புதல்வியே! உன்னை ஒன்று கேட்க விழைகின்றேன். அதற்குத் தக்க விடைதருவா யென்பது என் நம்பிக்கை" எனக் கூறினர். தம் தந்தையார் தம்மை என்ன கேட்கப் போகின்றார் என்பதை அவர் ஒருவாறு உணர்ந்திருப்பினும் அதை வெளிக்காட்டாது, "அங்ஙனமே ஆகுக" என விடை பகர்ந்தனர். ஆழ்வார், "உனக்கு மணப் பருவம் நெருங்கிவிட்டமையின், நீ யாரை மணக்க விரும்புகின்றனை என்பதை அறிய அவாவுறுகின்றேன்" என்று வினவினர். உடனே ஆண்டாள் சிறிது யோசித்தவர் போல் நடித்து, "அடியாள் எம்பெருமானையே மணக்க விரும்புகின்றேன்; மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று தந்தையாருக்குப் பணிவுடன் விடை இறுத்தனர். அச்சொல் பெரியாழ்வாருக்கு மகிழ்வையும், வியப்பையும், கவலையையும் ஒருங்கே விளைவித்தது. ஏனெனில், எம்பெருமானே நம் மகளை மணந்து கொள்ளின், இதைவிடச் சிறந்த பேறு யாதுளது என்ற மகிழ்வும், ஈசுவரன் மானிடப் பிறவியைத் தாங்கியிருக்கும் இச்சிறுமியை மணந்து கொள்வானோ என்ற ஐயமும், அங்ஙனம் செய்யாவிடின் நம் புதல்வி மணமில்லாமலே காலங்

கழிக்க நேரிடுமே என்ற கவலையும் ஒன்றன்பின் ஒன்ருக அவர் மனத்தைத் துன்புறுத்தின. ஆனால், தம் புதல்வி சூட்டித் தந்த மாலையை மிக்க அன்புடன் ஏற்று உகந்தருளிய எம்பெருமான் ஒருகால் அவள் கருதியபடி அங்கீகரிக்கவுங் கூடும் என்னும் எண்ணம் அவருக்குச் சிறிது ஆறுத லளித்தது. ஆதலால், தம் மகளாரைப் பார்த்து "அடியார்க் கெளியனாய்த் தொண்டர்கள் பக்திக் கயிற்றிற் கட்டுண்டுழலும் ஈஸ்வரன் ஒருவனே, அவரவர்கள் பக்குவத்திற்கும் நிலைமைக்கும் தக்கவாறு அருள்புரியும் பொருட்டு வேறு வேறு திருநாமங்களைப் பெற்று நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் அர்ச்சாவதாரமாய் வீற்றிருக்கின்ற ருதலின், அவர்களுள் யார்மாட்டு நீ விருப்பங்கொண்டுள்ளாய்'' என வினவினர்.

நம் அன்னையார், பல அறிவு நூல்களைக் கற்றும் பெரியோர்கள் அருண்மொழிகளைக் கேட்டும் கல்வி கேள்விகளின் ஞானம் வாய்க்கப் பெற்றவ ராதலால், எம்பெருமானுக்கு அந்தந்த க்ஷேத்திரத்திலுள்ள குண விசேடங்களையும், புகழையும், அருட்டிறத்தையும் அறியாது ஒன்றையும் தீர்மானிக்க அவர் மனம் இசைந்திலர். ஆதலால் அவர், நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களின் சிறப்புக்களையும் தமக்குக் கூறியருள வேண்டுமெனத் தம் தந்தையைப் பணிவுடன் பிரார்த்தித்தனர். தம் மகளாரின் அறிவின் நுட்பம் ஆழ்

வாரை ஆனந்தக் கடலில் ஆழ்த்தியது. ஆழ்வாரும் தம் செல்வப் புதல்விக்கு, நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் களின் சிறப்புக்களைத் தனித்தனியே எடுத்தோதினர்.

இவ்வாறு தந்தையார் கூறுங்கால், ஆண்டாள் கருத்துமுற்றும் அவ்விஷயத்திலேயே படிந்திருந்தது. ஆதலின், ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளியிருக் கும் கண்ணபிரான் தன்மையைக் கேட்டவளவில் மெய்ப்புளகமும், திருவேங்கடமுடையான் பெருமை யைச் செவியுற்றபோது முக மலர்ச்சியும், திருமாலிருஞ் சோலை யழகரது சிறப்பைக் கேட்ட மாத்திரத்தில் மன மகிழ்ச்சியும் அடைந்தனர். ஆனால்,

“ குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவு ளெந்தை அரவணைத் துயிலு மாகண்
டுடலெனக் குருகு மாலோ! என்செய்கேன் உலகத் தீரே ”

எனத் தொண்டரடிப்பொடி யாழ்வார், உயிரும் உணர் வும் உருகிப் பாடியருளிய பெரியபெருமாளின் பெருமை அன்னையார் செவிப்பட்டவுடனே, தம்மைத் தாம் மறந் தவராய்ப் பரவசப்பட்டுச் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றாதிருந்தனர். இரும்பைக் காந்த மிழுப்பதென, அவர் மனத்தைத் திருவரங்கநாதன் சிறப்புக் கவர்ந் தது. தம் உணர்வுமுழுதும் அவர்மாட்டே சென்று கலந்தது; பொறியும் புலனும் ஒன்றுபட்டு, அந்தக் கரணங்களின் செயலற்று, ஈஸ்வரனைத் தியானிக்கும்

ஞானியைப் போன்று சிறிது நேரம் அசைவற்றிருந் தனர். அந்நிலையில் அன்போடு அகங் குழைந்து உருகி அவனையே பற்றுக்கோடாக அடைபவர்களின் மனக் கண்ணிற்குப் புலப்படும் எம்பெருமான், அவர் ஞானக் கண்களுக்குத் தோன்றினர்.

எம்பெருமான் நூற்றெட்டுத் திருப்பதிகளிலும் என்னென்ன உருவங்களோடு சேவை சாதிக்கின்றனர் என்பதையும், ஆங்காங்கு அவர் கொண்டிருக்கும் கருணைத் திறங்களையும் ஆண்டாள் முன்னரே தம் தந்தையாரால் அறிந்துள்ளனராதலின், அவ்வத் திருப்பதி களின் எம்பெருமான்கள், அவருக்கு உருவெளித் தோற்றமாகச் சேவை சாதித்தபோது, அவர்களை இன்னர் இன்னரென்று நன்கு உணர்ந்து கொண்டனர். அவ் வுருவெளித் தோற்றங்களிலும் திருவரங்கத் தெம்பிரான் தோற்றமே நம் அன்னையார் மனத்தைக் கவர்ந்தது. ஆதலின் அவரையே மனத்திற் காதலித்து, அவர்மாட்டே அல்லும் பகலும் அன்பு செலுத்தி வந்தனர்.

இங்ஙனம் நம் கோதைப்பிராட்டியார், நடக்கும் போதும் இருக்கும்போதும் படுக்கும்போதும் ஸ்ரீரங்க நாதனையே நினைத்துக்கொண்டிருந்தனர். அன்னையார் அன்பை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்தினுல் எம்பெருமான் விரைவில் அவருக்கு மிக்க அருள் புரிந்திலர். ஆயினும், அவருக்குச் சிறி தேனும் கருணை காட்டாவிடின் அவர் உயிர் துறப்

பினும் துறப்பர் எனக் கருதி, எம்பெருமான் அவர் கனவிற் றோன்றினர். அக் கனவில், திருமணத்திற் காகத் தனக்குப் புதிய கூறையுடுத்திக் கண்ணபிரானோடு தன்னை உடனமர்த்திக் கங்கணங் கட்டியதாகவும், மாமறை முழங்கியதாகவும், கண்ணன் தன் கையைப் பிடித்துக்கொண்டு அக்கினியைச் சுற்றி வந்ததாகவும், அவன் தன்காலைப் பிடித்து அம்மிமீது வைத்ததாகவும்' பின் இருவரும் மிக்க சிறப்புடன் ஊர்வலம் போந்ததாக வும் பல நிகழ்ச்சிகளைக் கண்டனர். கோதையார் அதைத் தம் தோழிக்குக் கூறி ஆனந்தக்கடலி லாழ்ந்தனர்.

இங்ஙனம் இரவும் பகலும் ஆண்டாள் மனமுழுதும் பெரியபெருமாளிடமே ஊன்றி யிருந்தது. அவர் நடந்துகொள்ளும் முறையி லிருந்தே அவ் விஷயத்தை ஆழ்வார் நன்குணர்ந்தனர். தம் மகள் கருதியிருக்குங் காரியம் எங்ஙனம் கைகூடும் என்பது தான் ஆழ்வார்க் கிருந்த பெருங்கவலை. ஆயினும், மக்களின் இன்ப துன்பங்களை ஈஶ்வரன் நன்கு உணர்வானல்லனோ? இம் முறையில் அன்பர்களின் குறைகளைத் தீர்ப்பது தன் கடமை என்பதை இறைவன் அறியமாட்டானோ? ஆழ்வார் மனக்கலக்கத்தை எம்பெருமான் நன்குணர்ந்து, அதைப் போக்குதற்குத் தக்க வழியைத் தேடினர். அஃதாவது, எம்பெருமான் ஒருநாள் ஆழ்வார் கனவி லெழுந்தருளி, "அன்பிற் சிறந்த ஆழ்வீர்! நும் திருமகளை நம் திருவரங்கம் பெரிய கோயிலுக்கு அழைத்துவாரும். அவளை நாம் ஆட்கொள்வோம்"

எனத் திருவாய் மலர்ந்தருளினர். இவ்வற்புத விஷயம் ஆழ்வார் மனத்தைப் பெரிதும் இன்பத்தி லாழ்த்தியது. அன்றே தாம் அவ்வருமைப் புதல்வியை வளர்த்ததன் பயன் முற்றுப்பெற்றதாக நினைத்தார்.

ஆண்டாளுக்குத் தாயும் தந்தையுமாக விளங்கிய ஆழ்வார், இவ்விஷயத்தில் அளவுகடந்த ஆனந்தமடைந் தார். அதனினும், அறிவிற் சிறந்தவர்களாற் கொண் டாடத்தக்க புகழ்ச்சியன்றோ நம் அன்னையாருக்கு உண் டாயது. அவ்வமயம் ஆழ்வார் உற்றநிலை ஒருவராலும் எடுத்துரைக்குந் தகைமை யுடையதன்று. ஒப்பு உயர் வற்ற இவ் விஷயத்திற்கு வேறெதை உவமைப் படுத்த இயலும்? ஸ்ரீராமபிரான் பரசுராமனை வென்ற போதும், அவருக்கு மகுடாபிஷேகத்திற்கு யோசிக்குங் கால் குடிகள் எல்லையற்ற களிப்பைக் காட்டியபோதும், தசரதனுக்கு உண்டான உவகையையும் இங்கு ஒப்பிட முடியாது. அதற்கும் இதற்கும், அணுவிற்கும் மலைக்குமுள்ள வேறுபாடு தோன்றும். ஆதலால், 'ஆழ் வார், இனி நமக்கு யாதொரு கவலையு மில்லை. யாவும் எம்பெருமான் செயல்' என இன்புற்றிருந்தனர்.

## 13. கோதையாரைத் திருவரங்கம் கொண்டுசெல்லுதல்

இங்ஙனமே சிலநாட்கள் கழிந்தன. கோதைப் பிராட்டியார் வழக்கம்போல் இடைவிடாது எம்பெருமானையே விரும்பி மனோரதித்துக் கொண்டிருந்தனர். ஆழ்வார் தம் புதல்வியின் மணத்தைக் குறித்து அடிக்கடி நினைப்பினும், "இப்பொறுப்பு என்னைவிட ஈச்வரனுக்கே பெரிதும் உரித்து" என்னும் நினைவு அதை அப்புறப்படுத்தியது. ஆனால் ஆண்டாளுக்குப் பெரியாழ்வாரைப் போன்று, 'எம்பெருமான், எப்பொழுதாயினும் வந்து நம்மை அங்கீகரிப்பர்' எனப் பொறுமையுடனிருக்க முடியவில்லை. எங்ஙனம் ஒருவருக்கு ஓர் அரிய பொருளில் உண்டாகும் இச்சையானது, 'கிடைக்கும்போது கிடைக்கும்' என்று இருக்கவிடாமல் பல முயற்சிகளில் ஈர்த்துச் செல்லுமோ, அங்ஙனமே இவருக்கும் *ப்ராப்யத்தி லிருந்த விருப்பமானது இவரைப் பல முயற்சிகளிலும் இழுத்துச் சென்றது. ஆதலால், இவர் இதற்காகச் செய்த முயற்சிகள் அளவிறந்தன. அவையாவன, தம்மை எம்பெருமானோடு சேர்க்கவேண்டுமென மன்மதன் காலில் விழுதல், அவன் எப்போது தம்மை அங்கீகரிப்பான்

---

*ப்ராப்யம்=பலம்.

எனக் *கூடலிழைத்துப் பார்த்தல், குயில்கள் முதலிய பறவைகளையும் மேகங்களையும் நோக்கி எம்பெருமானோடு தம்மைச் சேர்க்கும்படி வேண்டுதல், அவன் இடக் கரத்திற் றுங்கியுள்ள திருச்சங்கின் புண்ணியத்தைப் புகழ்தல் முதலிய பலவற்றையும் செய்துகொண்டிருந்தனர்.

சின்னாட்களுக்குப் பின், இனி நாம் ஆண்டாளை அங்கீகரித்தல் வேண்டுமென்னும் எண்ணம், திருவரங்கத்தில் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீரங்க நாதனுக்கு உதித்தது. ஆதலின் அவர், திருவரங்கத்திலுள்ள ஸ்தாநிகர் முதலிய கோயிற் பரிகரங்களின் கனவிற்றோன்றி, பின்வருமாறு தெரிவிக்கலாயினர்: "பூமிப்பிராட்டியின் அவதாரமான ஸ்ரீஆண்டாள் என்னும் திருநாமம் பெற்ற ஓர் அருட் சிறுமி, ஸ்ரீவில்லிபுத்தூரில், நம் அருமை யடியனாகிய பெரியாழ்வார் திருமாளிகையில் வளர்ந்து வருகின்றனள். நீங்கள் சகல மங்கள வாத்தியங்களோடும், சத்திர சாமராதி பரிகரங்களோடும் நமது நவரத்தின பல்லக்கைக் கொண்டு ஆங்குச் சென்று, அவளை இங்குக் கொண

*கூடலிழைத்தல் என்பது - வட்டமாக ஒரு கோடு கீறி அதன் உள் முழுவதும், சிறுசிறு சுழிகளைச் சுழித்து, அவைகளை இரண்டிரண்டாக எண்ணிப்பார்க்கும் ஒரு குறி. அவை இரட்டையில் முடியின், தாம் நினைத்த காரியம் கைகூடுமெனவும், ஒற்றையில் முடியில் காரியம் கைகூடாதெனவும் ஏற்பாட்டைச் செய்து கொள்ளுதலாம்.

ரல் வேண்டும்'' எனத் திருவாய் மலர்ந்தருளினர். என்றும் கேட்டும் கண்டுமிராத அக் கனவு அவர்களைப் பிரமிக்கச் செய்தது. அவர்கள், முன்னர் பெரியாழ்வாரைப்பற்றிச் சிறிது அறிந்திருந்தனரே யன்றி, அவருக்கு ஒரு மகளிருப்பதாக அறியமாட்டார்கள். அவர் பூமிப்பிராட்டியின் அமிசம் என்பதைக் கேட்டபோது, அவர்கள் திடுக்கிட்டனர். பெரியாழ்வாரின் பெருமை அப்போதே அவர்கள் மனத்தில் நன்கு ஊன்றியது. அவ்வம்மையார் பொருட்டாக எம்பெருமானைக் கனவிற் காணப் பெற்றேமே என்னும் உவகை அவர்களைப் பெரிதும் மகிழ்வுறச் செய்தது. அவர்கள் அத்தெய்விக விஷயத்தை ஊர் முழுதும் பரவச் செய்தார்கள். அதைக் கேட்டு களி கூராதார் ஒருவரு மிலர். கங்கையிற் புனிதமாய காவிரி நடுவண் பூத்த திருவரங்கம், உவகை பூத்த திரு அரங்கமாகவே விளங்கிற்று.

அப்பெரியார்கள் அரங்கநாதன் திருவுள்ளத்தின் படியே, ஸ்ரீ வில்லிபுத்தூர் போந்து, அவ்வருமைப் புதல்வியைப் போற்றிவளர்க்கும் பெரியாழ்வாரை வணங்கி, எம்பெருமான் கட்டளையை மிக்க பக்தி விநயத்துடன் அவருக்குத் தெரிவித்தனர். அவ்வருள் வார்த்தையைச் செவியேற்ற ஞான்று பெரியாழ்வாரடைந்த இன்பத்தை யாரால் அளந்தறியக்கூடும்? தம் மக்களைச் சான்றோரெனக் கேட்ட பெற்றோர், அவர்களை ஈன்ற பொழுதினும் பெரிதுவப்பர் அன்றோ? இங்ஙனம் இன்

பம் நிறைந்த மனத்தினராகிய பெரியாழ்வார், வடபத்ர சாயி சந்நிதிக்குச் சென்று, அவ்வர்ச்சாவதாரப் பெருமானை மனமார வாழ்த்திச் சிறிதுநேரம் தம்மை மறந்து நின்றனர். தமக்குண்டாகும் சிறப்புக்கள் பலவற்றிற்கும் அப்பெருமானே காரணம் என்பது அவர்தம் உறுதியான எண்ணம். தம் உடலும் உயிரும் அவரே என ஆழ்வார் கருதியிருந்தனர். இங்ஙனம் வடபத்ர சாயியை வணங்கி நின்ற ஆழ்வார், பின்பு நினைவை யடைந்து, காவிரியின் நாப்பண் எழுந்தருளியிருக்கும் திருவரங்கநாதன் கருத்தை அவருக்குத் தெரிவித்து, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்படலானார்.

இவ்விஷயம் அந்நாட்டிற்கு அரசனாகிய ஸ்ரீவல்லப தேவனுக்கு எட்டியது. அவன் அளப்பிலா உவகை பூத்தனன். இது நம் நாட்டிற்கே பெருஞ் சிறப்பென எண்ணி மகிழ்வெய்தினன். இத்தெய்விக விஷயத்தைத் தன்நாட்டினர் யாவரும் உணரவேண்டுமென்பது அவன் எண்ணம். அன்னையாரைத் திருவரங்கத்திற்கு மிக்க சிறப்புடன் அனுப்பக் கருதி, ஸ்ரீ வில்லிபுத்தூருக்கும் ஸ்ரீரங்கத்திற்கும் இடையிலுள்ள நெடுவழியை, வாழை கமுகு தென்னை முதலியவற்றாலும், பலவகை மலர்களாலும் அழகுபடுத்தும்படி உத்தரவளித்தனன்; அன்றியும், மந்திரியாகிய செல்வநம்பியும், தானும் பெரியாழ்வாருடன் திருவரங்கஞ் சென்று அவ்வருங் காட்சியை நோக்கவேண்டுமென்னும் அவா அவனைப் பெரிதும் உந்தியது. தான் அரசனாதலின், தன் குடி

களுள் ஒருவருக்கு வந்த சிறப்பு, தனக்கு வந்ததாகவே எண்ணினன். அவன் உள்ளக் கிளர்ச்சி அளவிடற்பாலதன்று. இம்முறையில் தன் நால்வகைச் சேனைகளையும் திரட்டிக்கொண்டு செல்வநம்பியுடன் ஸ்ரீ வில்லிபுத்தூர் சேர்ந்தனன்.

பின் கோதையாருக்கு, தோழிகள் அழகுக்கு அழகு செய்வதெனப் பல அணிகளைப் பூட்டினர்; கண் கவரக்கூடிய அழகிய உடையை உடுத்தி அலங்கரித்தனர். அநேகசூரியர்கள் ஒருங்கே உதித்தார்களென ஒளிரும் ஒரு மூடுபல்லக்கில் ஆண்டாளை எழுந்தருளப் பண்ணினர். சிவிகையின் அலங்காரமும் பிரகாசமும் நாட்டையே ஒளிரும்படி செய்தன. அச் சிவிகையின் முன்னும் பின்னும், ஞானத்திலும் கல்வி கேள்விகளிலும் சிறந்த பெரியோர் பலர் சூழ்ந்து சென்றனர். அவர்கள், "ஆண்டாள் வந்தாள்; சூடிக் கொடுத்த சுடர்க்கொடி வந்தாள் ; சுரும்பார் குழற் கோதை வந்தாள் ; திருப்பாவை பாடிய செல்வி வந்தாள் ; பட்டர்பிரான் புதல்வி வந்தாள் ; வேயர்குல விளக்கு வந்தாள்" எனப் பல விருதுகள் கூறினர். பட்டர்பிரானும் அரசனும் சிவிகையின் இருமருங்கிலும் தொடர்ந்தனர். யானைகள் சூழ்ந்து வந்தன ; இரதங்கள் நெருங்கி வந்தன ; படைக்கலம் பூண்ட காலாட் படைகள் சேர்ந்து வந்தன ; சங்க வாத்தியங்கள் முழங்கின; பேரிகைகள் கடல் போலப் பேரொலி செய்தன ; கொடிகள் நெருங்கின ; சுருதிகள் முழங்கின;

பக்தி சாகரத்தில் மூழ்கிய மக்கள் பலர் பல்லாண்டு பாடினர்; வேதம் வல்ல அந்தணர்களின் வாழ்த்தொலி வானமெட்டியது. எண்ணிறந்த பக்த சிரோமணிகள் பின் தொடர்ந்தார்கள். அக் காட்சி பக்தருக்கும் ஞானிகளுக்கும் பெரு விருந்தளித்தது; அது, பெருமாள் மணம் முடித்துக்கொண்டு மிதிலேயிலிருந்து அயோத்திக்குத் திரும்பிய அஞ்ஞான்று உண்டான சிறந்த காட்சியையும் தோல்வியடையச் செய்தது.

இனி, பெரிய பெருமாள் வீற்றிருக்கும் திருவரங்கத்தை நோக்குவோம்: அது மணமகன் ஊராகவும், அச்சிறப்பு நடைபெறும் இடமாகவும் இருந்ததினுல் ஆங்குள்ள மக்களின் கொண்டாட்டம் எடுத்துக்கூறுந் தகைமை யுடையதன்று. சிலர், நகரை அலங்கரிப்பதில் ஈடுபட்டனர்; சிலர் திருக்கோயிலே அழகு படுத்தினர். சிலர் மங்கல வாத்தியங்களே வாசித்துக்கொண்டிருந்தனர். சிலர் வாழ்த்துக் கூறினர். சிலர் அன்னேயார் வரவை எதிர்நோக்கி நின்றனர். சில கற்புடைய மாதர் *திருவந்திக்காப்பு ஏந்தி நின்றனர். வயதுசென்ற சில பெண்கள் பல்லாண்டு பாடினர்; மழையென மலர்களே வாரி இறைத்தனர். ஆங்காங்குக் கூட்டங் கூட்டமாக மக்கள் நின்றுகொண்டு அவ் வதிசயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

---

* திருவந்திக்காப்பு - மங்களார்த்தி.

## 14. பிராட்டியார்
## எம்பெருமானோடு கலந்து மறைதல்

மேற்கூறியவாறு சிறப்புடன் சென்ற ஆழ்வார் உள்ளிட்ட யாவரும் ஸ்ரீரங்கநாதன் சந்நிதிக்கு முன்புள்ள மண்டபத்தில் சிவிகையை இறக்கி, ஆண்டாளை, பச்சை மாமலைபோல் மேனியையும், பவளவாய்க் கமலச் செங் கண்களையும் உடைய எம்பெருமானைச் சேவிக்கும்படி செய்தனர். மெல்லியல் வாய்ந்த அன்னையார், ஆடை அசைய, காற்சிலம்பு ஒலிக்க, மணிகள் ஒளிர, முகத்தில் புன்முறுவல் பூப்ப, அன்பு வலித்திழுக்க அரங்கநாதனை உற்று நோக்கினர். பகல் முழுதும் விட்டுச் சென்று, மாலையில் வீடு திரும்பிய தாய்ப்பசுவைக் கண்ட கன்றெனக் கோதையாருக்கு முக மலர்ந்தது. *பரத்வம் முதலியவற்றிலும் சிறந்ததும், குணபூர்த்தியுடையதும் அர்ச்சாவதாரமே யாகும். தற்சமயம் நம்மனோர்களில் பலர் நினைக்கிறபடி கல்லினாலும், செம்பினாலும், சாந்தினாலும் செய்யப்பட்ட ஒரு விக்கிரகம் என அதை அவர் கருதிலர். அவர் நினைப்பு அவ்விக்கிரகத்தின்கண்ணுள்ள பரம் பொருளிடம் சென்றது. பொருள் தேடுதல் முதலிய தடுக்க வொண்ணாத பல காரணங்களினால் தலைவன் தன்னைவிட்டுப் பிரிய, அத் துயரை ஆற்றாளாய் மிக வருந்திக்கொண்டிருக்கும் கற்புடைய ஓர்இல்லக்கிழத்தி, தன் கணவனைக் கண்டவுடன் எங்ஙனம் களிப்புக்கடலில்

---

* பரத்வம் - பரமபதம்.

மூழ்கித் தன்னை மறப்பினும், தன்ஆர்வமானது தன்னை யறியாமலே அவளை அத் தலைவன்பால் இழுத்துச் செல்லுமோ, அங்ஙனமே ஆண்டாளையும் அவர் பேரன்பு அரங்கநாதன் பக்கல் ஈர்த்துச் சென்றது. விழுமிய அன்புடையவர்கள், ஒருவரை ஒருவர் சில நாட்கள் விட்டுப் பிரிந்து மீண்டுஞ் சேரின், மற்றையோரால் சொல்வதற்கும் எண்ணுவதற்கும் முடியாத பரஸ்பர அன்பு அவர்களுக்கு உண்டாகு மென்பது உலகம் அறிந்ததே. அங்ஙனமே ஆண்டாள் திருவரங்கநாதனைக் கண்டவுடன், அவருடைய மனத்தை இரும்பைக் காந்தம் இழுப்பது போன்று பெருமாள் திருமேனி யழகு கவரத் தொடங்கிற்று. "நாம் எங்குள்ளோம்; ஏன் இங்கு வந்தோம்; நாம் என் செய்தல் வேண்டும்?" என்பவைகளை அவர் அறவே மறந்தனர். பின்னர், சிறிது உணர்வுற்று தம் சிலம்பார்க்க, சீரார் வளையொலிப்ப, கொடிபோன்ற இடை யொல்க,கயல்போன்று மிளிரும் கடைக்கண் பிறழ, அன்னநடை நடந்து எம் பெருமான் அருகிற் சென்று, ஆநந்த பரவசராய் நாக சயனத்தை மிதித்தேறி எம்பெருமானுடன் கலந்தனர். என்றும், எங்கும் யாராலும் நினைத்தற்கும் இயலா அக் காட்சி அங்குள்ளோர் மனத்தைத் திடுக்கிடச் செய்தது; யாவருக்கும் ஒருவிதத் தியக்கத்தை யுண்டாக்கியது. 'அருமைக் குழந்தை கோதையார் எங்குச் சென்றிருப்பர்' என ஆழ்வாரும் மற்றையோரும் கலங்கினர்கள்! 'சிறிது மறைவில் ஒளிந்துகொண்டு நம்மை ஏமாற்று

கின்றனரோ,' என்னும் எண்ணமும் அவர்களை மயக்கியது. ஏனெனில், அன்னையார் எம்பெருமானை நோக்கிச் சென்ற சில அடிகள் அவர்கள் கண்களுக்குப் புலப்பட்டதேயன்றி மற்றொன்றும் அவர்களுக்குத் தோற்றவில்லை. திருவரங்கநாதன் மூலஸ்தானமெங்கும் அர்ச்சகர்களைக் கொண்டு தேடுவித்தனர். பெரியாழ்வார் பன்முறையும் அன்னையாரை உரத்த குரலுடன் பேரிட்டழைத்தனர். ஆனால் மறுமாற்றம் வரப்பெற்றிலர். தேகத்துடன் அன்னையாரை எம்பெருமான் அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்வர் என்பது அவர்கள் எதிர்பார்க்கக் கூடிய தன்றன்றோ?

அவர்கள் இங்ஙனம் தியங்கிக்கொண்டிருக்குங்கால் அங்குள்ள அர்ச்சகர்மேல் ஸ்ரீரங்கநாதன் ஆவிர்ப்பவித்து "ஆழ்வாரே, நீர் ஒன்றும் கவலைப்பட வேண்டா. ஆண்டாளை யாம் அங்கீகரித்துக் கொண்டோம். சமுத்திர ராஜனைப்போல் நீரும் எமக்கு மாமனார் ஆயினீர். இனி நீர் வில்லிபுத்தூர் சென்று, முன்போன்றே வடபத்ருக்குத் தொண்டுபுரிந்து கொண்டிரும்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். இவ்வருள் வார்த்தைகள் ஆழ்வார் மனத்தில் நன்கு பதிந்தன. பின்னர் பெரியாழ்வாரும் ஸ்ரீவல்லபதேவனும் ஸ்ரீ வில்லிபுத்தூர் திரும்பி வந்து, ஸ்ரீ ஆண்டாளுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை அங்கு எழுந்தருளப்பண்ணுவித்தனர்.

பெரியாழ்வார் தம் திருக்குமாரியைப் பிரிந்ததற்கு வருந்தினரே யாயினும், அம்மையாரால் தமக்

குக் கிடைத்த பெரும்பேற்றிற்குப் பெரிதும் உவந் தனர்.

"ஒருமகள் தன்னை யுடையேன்
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன்
செங்கண்மால்தான் கொண்டு போனன்
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து
பெரும்பிள்ளை பெற்ற வசோதை
மருமக ளைக்கண் டுகந்து
மணாட்டுப் புறம்செய் யுங்கொலோ"

என வாயார வாழ்த்தி, தன் மகளின் சிறப்பையும், அவள் வளர்ந்த மேன்மையையும், அவள் நடந்து கொண்ட பெருந்தன்மையையும், அவளுக்குக் கிடைத்த மேம்பாட்டையும் எண்ணி எண்ணி மனமுருகி வந்தார். அவ்வூரிலுள்ளோர் இச்செய்தியைக் கேட்டு வியப்புற்று ராய் ஆழ்வாரைப் பெரிதும் துதித்தனர்; சிறு குழந்தை முதல் பெரியோர் வரையும், பக்தியற்றவர் முதல் பக்தி யில் முதிர்ந்தோர் ஈறாகவும் வியப்புற்று மகிழ்ந்தனர். ஊரெங்கும் அதுவே பேச்சாக விருந்தது. பெரியாழ் வார் ஈஸ்வரன்மாட்டு முன்னிலும் அமிதமான பக்தியை யும் பணியையும் செலுத்துவாராயினர். அவர், பல நாட்கள் வடபத்ரசாயிக்குக் கைங்கரியஞ் செய்து கொண்டிருந்து, இறுதியில் எம்பெருமான் திருநாட்டை யலங்கரித்தனர்.

முற்றிற்று

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்

# புதிய தமிழ்ப் பதிப்புக்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| புதுமுறை வாசகம்—இரண்டாம் புத்தகம் (இரண்டாம் வகுப்புக்கு) ... ... ... ... ... | 0 | 3½ |
| புதுமுறை வாசகம்—மூன்றாம் புத்தகம் (மூன்றாம் வகுப்புக்கு | 0 | 4½ |

## வித்வான் V. வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதியவை

### I, II, III பாரங்களுக்கு உரியவை

| | | |
|---|---|---|
| தமிழ் நூதன வாசகம்—முதல் புத்தகம் ... ... | 0 | 7 |
| தமிழ் நூதன வாசகம்—இரண்டாம் புத்தகம் ... ... | 0 | 8 |
| தமிழ் நூதன வாசகம்—மூன்றாம் புத்தகம் ... ... | 0 | 8 |
| இளைஞர் தமிழ் இலக்கணம்—(முதல் மூன்று பாரங்களுக்கும் உரியது) ... ... ... ... | 0 | 8 |

## வித்வான் இ. கி. நடேச சர்மா எழுதியவை

| | | |
|---|---|---|
| செந்தமிழ்க் கலம்பகம் ... ... ... (IV, V பாரங்களுக்கு உரியது) ... ... | 0 | 10 |
| காதம்பரி ... ... ... ... | 0 | 12 |
| கோதையார் ... ... ... ... பண்டிதை - S. கிருஷ்ணவேணி அம்மாள் எழுதியது | 0 | 5 |
| அறிவை விளக்கும் அருங்கதைகள் ... ... ச. கந்தசாமி முதலியார் எழுதியது ... ... | 0 | 5 |